Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY தேசிய தினசரி

போன்: 389 தபால் பெட்டி எண் 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ தை 4 ஆம் நாள ஷஃபான் 10 (17-1-62) புதன்கிழமை இதழ் 288

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்-2 மதுரை

# டச்சு போர்க்கப்பல்கள்

## திடீரென தாக்கின!

### இந்தோனேஷிய 'டார்ப்பிடோ மூழ்கடிக்கப்பட்டது

### டாக்டர் சுகர்ணோவின் உயர்தர ஆலோசனை

ஜாகர்த்தா, ஜன. 16

மேற்கு நியூகினியின் தென்கரைக்கருகே நேற்று டச்சு போர்க்கப்பல்கள் இந்தோனேஷிய டார்ப்பிடோ கப்பல்களைத் தாக்கி அவற்றில் ஒன்றை மூழ்கடித்ததாயும், மற்றொன்றைச் சேதப்படுத்தியதாயும் அறிவிக்கப்பட்டது.

இத் தாக்குதல்பற்றி இந்தோனேஷிய ஜனாதிபதி டாக்டர் சுகர்ணோ தமது முப்படைத் தலைவர்களுடனும், உயர் அதிகாரிகளுடனும் ஆலோசனை நடத்தியதுடன், மந்திரிசபைக் கூட்டத்தையும் கூட்டி ஆலோசித்தார்.

டச்சு தாக்குதல்பற்றி ஐ. நா. தலைமைக் காரியதரிசிக்குத் தெரிவிக்கப்போவதாய் ஒரு இந்தோனேஷிய ராணுவ அதிகாரி தெரிவித்தார். தாக்குதலுக்காளான இந்தோனேஷியக் கப்பல்கள் டச்சுப் பிரதேசத்திற்கு வெளியேதான் நின்றுகொண்டிருந்ததாயும், டச்சு போர்க்கப்பல்கள் திடீரென இவ்விதம் தாக்குதலில் ஈடுபட்டன என்றும் மேலும் அவர் கூறினர். கரைக நாசகாரிகள் இத் தாக்குதலில் ஈடுபட்டனவாம். டச்சுக்காரர்களின் திடீர்த் தாக்குதலுக்குப் பழிவாங்க ஏற்பாடு செய்யப்படும்என்றும் அவர் தெரிவித்தார்

#### கரையிறங்க முயற்சியாம்

ஆனால், மேற்கு நியுகினியில் இறங்க இந்தோனேஷியர்கள் முயன்றதாயும், இந்த முயற்சி முறியடிக்கப்பட்டதாயும் டச்சு தரப்பில் அறிவிக்கப்பட்டது. குறித்த டார்ப்பிடோக்கள் டச்சு ஆதிக்கப் பகுதிக்குள்ளேயே தாக்கப்பட்டதாயும் இதுசம்பந்தமாக இந்தோனேஷியாவின் புகார் உண்மைஅல்லவென்றும் ஹாலந்து அரசாங்கம் மறுப்புத் தெரிவித்தது.

#### 50 பேர் கைது

இத்தாக்குதலில் 50 இந்தோனேஷியர்கள் டச்சுக்காரர்களால் சிறைப்பிடிக்கப்பட்டதாய் ஆஸ்திரேலிய செய்தி ஒன்று கூறியது.

#### டச்சுப் படை பலப்பெருக்கம்

தாக்குதலுக்குப்பின் டச்சு மந்திரி சபையின் அவசரக்கூட்டம்ஒன்று நடைபெற்றதாயும், அதைத் தொடர்ந்து டச்சு கடற்படை மேற்கு நியூகினிக் கரைகளில் பெருமளவில் ஒத்திகை நடத்திவருவதாயும், டச்சு விமானப் படைப் பலம் அதிகரிக்கப்பட்டுவருவதாயும் மேலும் அறிவிக்கப்பட்டது.

ஆஸ்திரேலிய மந்திரி சபையின் அவசரக்கூட்டம் ஒன்றும் இதுசம்பந்தமாக நடைபெற்றது. சம்பவம்பற்றி ஹாலந்தும், இந்தோனேஷியாவும் ஐ. நா. தலைமைக் காரியதரிசிக்குத் தெரிவித்திருப்பதாய்க் கடைசியாகக் கிடைத்த தகவல்கள் கூறின.

#### இந்தோனேஷியா பேச்சுவார்த்தைக்கு தயாரில்லை

மேற்கு நியூகினி சம்பந்தமாக நிபந்தனையற்றமுறை

(8ம் பக்கம் பார்க்க)

## கோப்பாய் கல்லூரி

### அநாதைகள்விடுதிதீக்கிரை

### புனர்நிர்மாணத்துக்கு உதவுமாறு அதிபரின் உருக்கமான வேண்டுகோள்

யாழ்ப்பாணம், திங்கள்

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அநாதைவிடுதி நேற்றிரவு தற்செயலாகத் தீப்பற்றிக் கொண்ட காரணத்தால் கட்டடமும் உடைமைகளும் தீக்கிரையாயின.

இக்கட்டடமும் அநாதைப் பிள்ளைகளின் உடைமைகளும் தீக்கிரையானதால் 1500 ரூபாக்கு மேற்பட்ட நஷ்டமேற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதனால் இங்குள்ள 105 அநாதைப்பிள்ளைகளும் மிகுந்த கஷ்டத்துக்குள்ளாகியிருக்கின்றனர்.

இக்கட்டிடத்தைப் புனர்நிர்மாணம் செய்து ஓட்டினலோ அன்றி அலுமினியம் தகரத் தினலோ வேய்ந்து கொடுப்பதற்கு உதவிசெய்யுமாறுகோரி இக்கல்லூரி அதிபர் திரு ஈ. வி. ஏ. நவரத்தினராசா ஓர் உருக்கமான வேண்டுகோளை விடுத்துள்ளார். இந்த வேண்டுகோளில் இக்கட்டடத்தைப் புனர்நிர்மாணம் செய்வதற்கு உதவுமாறு பொதுஸ்தாபனங்களையும் மற்றவர்களையும் அவர் கேட்டிருக்கிறார். இந்நிதிக்குப் பொதுஸ்தாபனங்கள்பலஉதவி அளிக்க முன்வந்திருப்பதாகத் தெரிகிறது.

## கொழும்பு துறைமுக நிலைமை

கொழும்பு, செவ்வாய்

கொழும்பு துறைமுகத்தில் ராணுவத்தினர் நேற்று 5000 டன் உணவுப்பொருட்களையும் சில்லறைச் சாமான்கள், நிலக்கரி ஆகியவற்றையும் இறக்கினர் என்றும், கொப்பரா, ரப்பர், தும்பு, தேங்காய்த்துருவல் ஆகியவற்றைக் கப்பலில் ஏற்றினர் என்றும் அறிவிக்கப்படுகிறது. சிறைக் கைதிகளும் பால்யக் குற்றவாளிகளும் இவ் வேலையில் உதவிசெய்தனர்.

## ஊநு

கல்கத்தா, ஜன. 16

பர்மியப் பிரதமர் ஊநூவும் அவரது மனைவியும் தாயகம் திரும்பும் வழியில் இன்று கல்கத்தா வந்தனர். நாளை அவர்கள் ரங்கூன் செல்கிறார்கள்

## பிப்ரவரி 17ந் திகதி சோமராமவுக்கு தூக்கு

### எதிரிகள் பிரிவிகவுன்ஸிலுக்கு அப்பீல் செய்வர்?

கொழும்பு, செவ்வாய்

பண்டாரநாயக்கா கொலை வழக்கில் 4வது எதிரியான சோமராமவின் தூக்குத் தண்டனை பிப்ரவரி 17ந் தேதிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட எதிரிகள் தண்டனையை எதிர்த்து பிரிவி கவுன்ஸிலுக்கு அப்பீல் செய்வது பற்றித் தீர்மானித்த பின்பே பண்டாரநாயக்கா கொலையின் அரசியல் அம்சம்பற்றி விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமிக்கும் விஷயத்தை அரசாங்கம் ஆலோசிக்கும். பிரிவிக் கவுன்ஸிலுக்கு அப்பீல் செய்வதென எதிரிகள் தீர்மானித்தால், பிரிவிக்கவுன்சில் தீர்ப்பு வெளியான பின்புதான் கமிஷன் நியமிக்கப்படும். எவ்வளவு காலத்திற்குள் பிரிவிகவுன்சிலுக்கு அப்பீல் செய்யவேண்டுமென்ற நிர்ணயம் கிடையாது. முதலில் அப்பீல் செய்ய அனுமதிக்கப்பட வேண்டுமா இல்லையா என்பது முடிவு செய்யப்படும்.

பிரிவிகவுன்சிலுக்கு அப்பீல் செய்வதற்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் என எதிரிகளின் வழக்கறிஞர்கள் கருதுவதாய்த் தெரிகிறது. இன்று காலை குற்றவாளிகளின் வழக்கறிஞர்கள் சிறையில் மூன்று குற்றவாளிகளையும் சந்தித்து அவர்களின் கருத்தைக் கேட்டனர்.

## தீ விபத்தில் ஐவர் பலி

புதுடில்லி ஜன. 16

பரோடாவில் மரக்கூடம் ஒன்றில் நள்ளிரவு ஏற்பட்ட தீ விபத்தில் மாண்டவர்களின் 5 பிரேதங்கள் கண்டுபிடிக்கப்பட்டது. இன்னும் சிலர் மாண்டிருக்கக்கூடும் என்றும் நம்பப்படுகிறது 3 பேருக்குக் காயம் ஏற்பட்டது.

## அஸ்வான் அணை

கெய்ரோ, ஜன. 16

அஸ்வான் அணையின் முதலாவது கட்டம் 1964ம் ஆண்டுக்கு முன் பூர்த்தி செய்யப்படும் என நம்புவதாய் ரஷ்யப் பிரதமர் திரு. குருஷ்சேவ், ஜனாதிபதி நாஸருக்குத் தெரிவித்திருக்கிறார். இவ்வணையைக் கட்ட ரஷ்யா உதவியளித்து வருகிறது!

---

கொழும்பு, செவ்வாய்

மலாயா மன்னர் தம்பதிகள் இன்று ஒருநாள் இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு தாயகம் புறப்பட்டனர். காலையில் அவர்கள் கண்டி சென்றிருந்தனர்.

## தேரில் பிடித்த தீயை அணைக்க முயன்ற குருக்கள்

### கிணற்றில் வீழ்ந்து மாண்டார்

சாவகச்சேரி, செவ்வாய்

சாவகச்சேரி வடக்கு வீரபத்திரர் கோவிலில் வசித்து வந்த சின்னையாக் குருக்கள், தேரில் பிடித்த தீயை அணைக்க கோவில் கிணற்றில் தண்ணீர் அள்ளும்போது வீழ்ந்து இறந்ததாக அறியப்படுகிறது

காலஞ்சென்றவரின் மனைவி சாட்சியமளிக்கும்போது கூறியதாவது:— "சென்ற இரவு நாங்கள் இருவரும் சாப்பிட்டுவிட்டு நித்திரை செய்தோம் இரவு நாலுமணியளவில் குருக்கள் என்னை எழுப்பித் தீப்பெட்டி பெற்றுக்கொண்டு வெளியில் சென்றிருந்தார். குளிர்போக்குவதற்குத் தீச்சட்டியில் காய்வது வழக்கம்.

(8-ம் பக்கம் பார்க்க)

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதப் சீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்

### தேவை

நல்ல அனுபவமுள்ள கொம்போசிட்டர்கள், பிளேற்றின் மெஷின் மைன்டர்கள் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். விவேகானந்த அச்சகம் - புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

### நேயர்கள் கவனிக்கவும்

எனது
கண் பரிசோதனை
நிலையத்துக்குப்
பக்கத்தில் முதலாம்
குறுக்குத் தெருச்
சந்தியில்
**பேர்னண்டோ**
என்ற விலாசத்துடன்
ஒரு நிலையம்
ஆரம்பமாகியுள்ளது.
அது எனது நிலையமன்று.
**வி. ரி. பேர்னண்டோ**
என்பதுவே எனது நிலையம்.
பல் வைத்தியர்
கண் பரிசோதகர்
11, பெரியதெரு, யாழ்ப்பாணம்.

### தேவை

திறமைவாய்ந்த சலவைத் தொழிலாளர் தேவை. துணி கழுவுவதற்கும், ஸ்திரிக்கை போடுவதற்கும். திறமைக்குத் தகுந்த சம்பளம் கொடுக்கப்படும். விங்கம்ஸ் சலவைத்தொழிற்சாலை, 87 ஆஸ்பத்திரி வீதி, பெரியகடை; யாழ்ப்பாணம்.

# சிவராத்திரியில் தமிழ் காங்கிரஸ் வாலிபமாநாடு

## பொருளாதாரத் திட்டம் தயாரிக்க நடவடிக்கை

உடுப்பிட்டி, செவ்வாய்

"அரசியல் அனுபவமும் தீர்க்க தரிசனமுமற்ற தலைமையை ஒதுக்கிவிட்டு, அரசியல் அஞ்ஞாதவாசத்துக்கு அனுப்பப்பட்ட திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தை மீண்டும் அழைத்து அவரது தலைமையில் அணிவகுப்பதே தமிழரின் இன்றைய கடமையாகும்."

இவ்வாறு வடமராட்சி தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணி செயலாளர் திரு. ஆர். ஆனந்தராஜா, ஞாயிறு பிற்பகல் நெல்லியடி மகாத்மா படமாளிகையில் நடந்த வாலிபமுன்னணிக் கூட்டமொன்றிற் குறிப்பிட்டார். பல்கலைக் கழகமாணவன் திரு. கே. குணசிங்கராஜாவின் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. திரு. குணசிங்கராஜா தமது தலைமையுரையிற் குறிப்பிட்டதாவது;-

"வள்ளுவன் கண்ட இலட்சிய நாட்டை யதார்த்தத்திற் காண்பது ஒன்றையே தமிழர் தமது இலட்சியமாகக்கருதவேண்டும். பிறநாட்டுத் தொழில் நுட்பக் கலைஞரை இங்கு வரவழைப்பதன்மூலம், தொழிலார்வம் மிக்க தமிழரைப் பிறநாடுகளிற் பயிற்சிபெறவைப்பதன் மூலமும் நமது சிறு கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யலாம்.

சிவராத்திரியன்று நடக்கவிருக்கும் தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணி மகாநாட்டிற்கு பொருளாதார அறிஞர் திரு. சீ. அழகரத்தினம், தமிழ்க் காங்கிரஸ் கொழும்புக் கிளைத் தலைவர் திரு. எஸ். சரவணமுத்து, உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் ஆகியோரை அழைத்து, ஒரு பொருளாதாரத் திட்டத்தை உருவாக்கவேண்டுமென்ற தீர்மானமும் மூன்று மாத காலத்தில் 5000 அங்கத்தவரைச் சேர்க்கவேண்டுமென்ற தீர்மானமும், கூடியவிரைவில் வடமராட்சியில் தமிழ்க் காங்கிரஸ் மகளிர் முன்னணியொன்றை நிறுவவேண்டுமென்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டன.

# 'அமைதியான முறையில் உரிமைக்காக உழையுங்கள்'

## திருமலையில் எஸ். ஜே. வி.

திருக்கோணமலை, செவ்வாய்

'பதவி உயர்வுக்காகவும், சம்பள உயர்வுக்காகவும் சிங்களத்தைப் படிக்கும் தமிழ் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் தமக்கு மட்டுமல்ல எதிர்காலத் தமிழ் சமுதாயத்தினருக்கும் துரோகம் செய்தவர்களாவர்.'

இவ்வாறு திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் திருக்கோணமலை நகரமண்டபத்தில் பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:

தமிழர் ஒன்றுபட்டு தமது உரிமைக்காக உழைக்க வேண்டும். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் பெரும்பான்மையான மக்கள் தமிழர்களே. ஆனல் அரசாங்கம் அவர்கள் மீது சிங்களத்தைத் திணித்து அவர்களது உரிமையை மறுப்பதோடு தமிழர்களின் தாயகத்தில் வேறு இனத்தவரைக் குடியேற்ற நடவடிக்கை எடுத்துள்ளது.

தமிழர்கள் தமது அடிப்படை உரிமையைப் பெற வேண்டுமானல் அமைதியான முறையில் தொடர்ந்து செயலாற்ற வேண்டும் சகல அலுவல்களையும் தமிழிலேயே நடத்த வேண்டும். காலஞ்சென்ற மூதூர் எம். பி. திரு. டி. ஏகாம்பரத்தை என்ஞல் என்றுமே மறக்க முடியாது. தமிழர்களும் எமது கட்சியும் என்றும் அவரை ஞாபகத்தில் வைத்திருக்கும். தமிழ் சமூகத்துக்காகவும் தமிழ் மொழிக்காகவும் கிழக்கு மாகாணத்திலுள்ள மக்கள் பல தியாகங்கள் செய்துள்ளார்கள்.'

காலஞ்சென்ற மூதூர் எம். பி. திரு. ஏகாம்பரத்தின் உருவப்படத்தை திரு. எஸ். ஜே. வி. திரைநீக்கம் செய்துவைத்தார்.

கம்யூனிஸ்ட்கட்சி நல்லூர் கிளை சார்பில் இவ்வைபவம் நடைபெறும்.

# 'பிரச்சினைகளை அரசாங்கம் தீர்க்கமாட்டாது'

## வாலிபர் சங்க கூட்டத்தில் டட்லி எச்சரிக்கை

கொழும்பு, செவ்

"நாட்டில் இன்று பெரிய நிதிக்கஷ்டம் ஏற்பட்டுள்ளது. இன்றைய மோசமான நிலைமைக்கு பண்டாரநாயக்கா அரசாங்கங்களே காரணம்."

இவ்வாறு யு. என். பி. தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. டட்லி சேனநாயக்கா வியாங்கொடை மொத்துன்னவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர். மொத்துன்ன யு. என். பி. வாலிபர் சங்கத்தின் ஆண்டுவிழா வைபவத்தையொட்டி இக்கூட்டம் நடைபெற்றது. திரு. டட்லி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"நாட்டின் முன்னேற்றத்துக்கான அபிவிருத்தி வேலைகளை பண்டாரநாயக்கா அரசாங்கங்கள் செய்யவில்லை. இவர்கள் ஆட்சிபீடத்தில் அமர்ந்த காலம் தொடக்கம் சனத்தொகை மிகவும் அதிகரித்துள்ளது. மக்கள் தொகை அதிகரிப்புக்கேற்ப நாட்டின் அபிவிருத்தியையும் அரசாங்கங்கள் அபிவிருத்தி செய்திருக்க வேண்டும். யு. என். பி. ஆரம்பித்து வைத்த அபிவிருத்தித் திட்டங்களின் லாபங்களை அனுபவித்ததே அவர்கள் செய்த அபிவிருத்தி வேலை.

காலஞ்சென்ற பிரதமரின் நான்கு வருட ஆட்சிதான் குறிப்பாக இன்றைய நிலைமையை ஏற்படுத்தியது. இன்றைய அரசாங்கம் பல கஷ்டங்களுக்குள்ளாகியிருக்கிறது. நிதிநிலைமை மோசமாகியுள்ளதால் தொடர்ந்து செயலாற்ற முடியாமல் அரசாங்கம் கஷ்டப்படுகிறது.

கஷ்ட நிலைமையைச் சமாளிப்பதற்கு ஏழை மக்கள்மீது அரசாங்கம் வரிகளை விதித்துள்ளது: மந்திரிகளின் பாராமுகக் கொள்கையால் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது."

வேறு அரசியல் கட்சிகள் அரசாங்கத்துடன் சேர்ந்து வருவதாலேயே அரசாங்கம் தனது கடமைகளைச் சரிவரச் செய்ய முடிவதில்லை எனத் திரு. டட்லி கூறினர்.

'காலஞ்சென்ற பிரதமர் 'மார்க்ஸிய வாதிகளோடும் ஏனைய அரசியல் கட்சிகளோடும் தொடர்புகொண்டதாலேயே நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாதிருந்தார். சிறிமா அரசாங்கமும் இதே நிலைமையில்தான் இன்று இருக்கிறது. கொள்கைகள் முழுவதும் மாறுபட்ட அரசியல் கட்சிகளோடு இன்றைய அரசாங்கம் இணையப்பார்க்கிறது. இந்த உண்மையை முன்பு நான் எடுத்துக் கூறியபோது மக்கள் சிரித்தனர். இன்று இதன் உண்மையைப் பலர் உணர்ந்திருப்பார்கள் தனது கொள்கைக்குமாறுன கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் கட்சிகளுடன் உறவு கொள்ளும் அரசாங்கம் நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது கஷ்டப்பட்டே தீரும்.'

## இராமசாமி ஐயரின் படத்திரை நீக்கம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

கம்யூனிஸ்ட்கட்சிப் பிரமுகரான திரு. எஸ. இராமசாமி ஐயரின் திருவுருவப் படத்திரைநீக்கம் இம்மாதம் 19ம் திகதி மாலை நடைபெறவிருக்கிறது.

# உங்கள் தினப்பலன்

—சோதிட ஆசான் செ. தெல்லியூர்—

பிலவ ஆண்டு தை மாதம் 4-ந் திகதி புதன் கிழமை (17 - 1 - 62) இரவு 10-15 வரை துவாதசி. பகல் 2-06 வரை ரோகிணி, சித்த யோகம் விசேட முகூர்த்தத் தினம், ஓர் மங்கலம், வயல் நாட்டம் செய்கை (10-08 முதல் 11-43 வரை) நெல் தானியங்கள் விதைத்தல், நாற்று நடல் (8-23 முதல் 10 வரை) கை விசேடம், புகையிலை கீரை, கோவா, நடுதல். புதிய தானியம் கொண்டுவருதல், புதுக்கணக்கு, வியாபாரம், பென்னுருக்குதல், விவாகம். அன்னப்பிராசனம் புதிதுண்ணல், வீடுகட்ட, குடிபுக. (10-08—11-43).

**இன்று பிறந்தவர்களுக்கு**

இத்தினத்தில் ஜெனனமானவர்களுக்கு மாசி முதல் சித்திரை வரை, ஆடி முதல் ஆவணி வரை, ஐப்பசி ஆகிய காலங்கள் மிகவும் நன்மைதரும், தேகநலம், பணவரவு, பதவி அந்தஸ்து, தொழில் முறை உயர்ச்சி ஆகிய உண்டு. சண்சனில் இடையிடை ரோகங்களுக்கு இடமுண்டு. குடும்பத்தில் இடையிடை வாக்குக் கலகம் குடும்ப சுகக்குறைவு ஆகியன காணப்படுகிறது. பண நிலைமையில் அதிருப்தி இருப்பது தெரியமாட்டாது. சொத்துக்கள் இருப்பவற்றை பாதுகாத்து நடக்கவேண்டும்.

| நட்சத்திரம் | பலன் |
|---|---|
| அச்சுவினி | சொத்துலாபம், பெரியோர் நட்பு. |
| பரணி | தொழிற்கேடு, பகைகவர் தொல்லை. |
| கார்த்திகை | தொழிற்சீர், நன்மை, நல்லசெய்தி கேட்டல். |
| ரோகிணி | கடின உழைப்பு-பலன் குறைவு. |
| மிருகசீரிடம் | பதவி நன்மை, சந்தோசம். |
| திருவாதிரை | பணவரவு—கடன் நிவர்த்தி. |
| புனர்பூசம் | தேகநலக் குறைவு, தொழில் மந்தநிலை. |
| பூசம் | குடும்ப நிம்மதி--பணவரவு. |
| ஆயிலியம் | மனக்கவலை, நற்பெயருக்கு இழுக்கு. |
| மகம் | செய்தொழில் வெற்றி, உற்சாகம். |
| பூரம் | சந்தேகம், மனத்தளர்ச்சி. |
| உத்தரம் | முயற்சி வெற்றி, தொழில் நன்மை. |
| அத்தம் | மதிப்பு குறைதல், பகைவர் கஷ்டம். |
| சித்திரை | குடும்ப நன்மை, பெரியோர் ஆதரவு, |
| சுவாதி | பெண்களால் நன்மை, குடும்பசுகம். |
| விசாகம் | கடன் தொல்லை, தார்மீகச்செலவு. |
| அனுஷம் | தேகநல அபிவிருத்தி, தொழில் நன்மை. |
| கேட்டை | கடும் உழைப்பு—பலிதக்குறைவு. |
| மூலம் | குடும்பசுகம், மனத்தைரியம். |
| பூராடம் | உணவில் அதிருப்தி, குடும்பதொலை, யோசனை. |
| உத்தராடம் | தொழில் நன்மை, மதிப்புயர்தல். |
| திருவோணம் | வீண் அலைச்சல், குடும்பசுகக்கேடு. |
| அவிட்டம் | நல்லோர் ஆதரவு, சுபசெய்தி—சித்தி. |
| சதயம் | கடன் வரவு, பணநிலையில் சீர். |
| பூரட்டாதி | இனக் கஷ்டம், சிந்தனை. |
| உத்தரட்டாதி | கற்றோர் ஆதரவு—தெய்வ வழிபாடு. |
| ரேவதி | நல்லவர் சந்திப்பு—தார்மீகச்செலவு. |


10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன!
இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!
எவை?

டொ
ல
ர்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
DOLLAR BRAND

பவுண் அடையாளம் உள்ள
அலுமினியப் பாத்திரங்களே!
ஏன்?

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது
டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!
டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!

எல்லாவற்றிற்கும் மேல்
உங்கள் தாய்ப் பொன்னுட்டில் மாவிட்டபுரத்தில்
நவீன முறையில் செய்யப்படுவது!

டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்
டொலர் மாத்திரமே
உத்தரவாதமானது!

தயாரிக்குமிடம்:
அலுமினிய இன்டஸ்றீஸ் லிமிட்
மாவிட்டபுரம். யாழ்ப்பாணம்
J. D

# போர்ச்சுக்கல்மீது தடை நடவடிக்கை

## ஐ. நா. சபையில் இரு நாடுகள் பிரேரணை

நியுயோர்க், ஜன. 16

அங்கோலா சம்பந்தமாக ஐ. நா. வின் தீர்மானத்தை அமுல் நடத்துவதற்கு போர்ச்சுக்கலை நிர்ப்பந்திக்க பொருளாதார ராஜீய தடை நடவடிக்கைகள் எடுப்பதுபற்றி ஐ. நா. பாதுகாப்புச் சபை ஆலோசனை செய்ய வேண்டும் எனக் கோரும் தீர்மானம் ஒன்றை போலந்தும் பல்கேரியாவும் நேற்று ஐ. நா. மகாசபையில் கொண்டுவந்தன.

கிறிஸ்மஸ, புதுவருட விடுமுறைக்குப் பின் ஐ. நா. மகா சபை நேற்று மீண்டும் கூடியது.

போர்ச்சுக்கலுக்கு ஆயுதங்களோ, போர்ச்சாதனங்களோ எந்த நாடும் கொடுக்கக் கூடாது என்று அத்தீர்மானம் கூறுகிறது.

அங்கோலாவில் காலனி ஆதிக்கம் முடிவுக்குக் கொண்டு வரப்படவேண்டும் என்றும் அங்கோலா மக்களுக்கு சுயநிர்ணய உரிமை அளிக்கப்பட வேண்டுமென்றும் அத்தீர்மானம் வலியுறுத்துகிறது.

மகாசபை நேற்றுக்கூடியபோது பொலிவியாப் பிரதிநிதி முதலில் பேசினர். அங்கோலா சம்பந்தமாக நியமிக்கப்பட்ட ஐ நா. உபகமிட்டிக்கு பொலிவியாவின் தலைமையில் தான் நியமிக்கப்பட்டிருந்தது.

அங்கோலாவுக்குச் செல்வதற்கு ஐ நா. உபகமிட்டிக்கு அனுமதி மறுத்துவிட்டு அங்கு மக்களின் எழுச்சியை போர்ச்சுக்கீஸியர் அடக்கி ஒடுக்குகின்றனர் என்று பொலிவியப் பிரதிநிதி கூறினர்.

போர்ச்சுக்கல் பிரதிநிதி பேசுகையில் இந்த விவாதத்தில் தாம் கலந்து கொள்ளப் போவதில்லையென்றும் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்க வேண்டிய அவசியம் நேர்ந்தால் பதிலளிக்கப்படுமென்றும் தெரிவித்துவிட்டு வெளியேறினர்.

அங்கோலா போர்ச்சுக்கலின் உள்விவகாரமென்றும் இது பற்றி ஐ நா. சபை விவாதிப்பது சட்ட விரோதமென்றும் போர்ச்சுக்கல் பிரதிநிதி ஆரம்பத்தில் கூறினர்.

## ஜெனிவாவில் பூன்ஊம்

### இணைந்தலைவர்களுடன் சந்திப்பு

ஜெனிவா, ஜன. 16

லாவோசில் தேசிய கலப்பு அரசாங்கம் அமைப்பது சம்பந்தமாக ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் லாவோசின் முத்தரப்பு இளவரசர்களும் ஜெனிவா வந்து சேர்ந்து கொண்டுள்ளனர்.

நேற்று ஜெனிவா வந்து சேர்ந்த லாவோசின் வலதுசாரித் தலைவர் இளவரசர் பூன்ஊம் லாவோசுக்கான 14 நாடுகளைக்கொண்ட சர்வதேசக் கமிஷனின் பதில் இணைத் தலைவர்களான திரு. புஷ்கினையும் திரு மக்டொனல்டையும் சந்தித்துப் பேசினர்.

லாவோஸ் விவகாரம் சம்பந்தமான அமெரிக்க ஜனதி கென்னடியின் விசேஷ பிரதிநிதி திரு. ஹரிமனையம் இளவரசர் பூன்ஊம் சந்தித்துப் பேசினர்.

## பொலிசார்பற்றி எம். பி. புகார்

முள்ளியவளை, செவ்வாய்.

"முல்லைத்தீவு, வவனியா ஆகிய நிலையங்களிலுள்ள பொலிசாரின் நடத்தைபற்றிப் பல புகார்கள், பொதுமக்களிடமிருந்து எனக்குக் கிடைத்துள்ளன. நானும் அவதானித்துள்ளேன். சட்டத்தை மதித்து நடக்கும் ஏழைகளுக்கு அவர்கள் உதவி புரியாமல், அதனை மீறுபவர்களுக்குத்தான் பாதுகாப்புத் தருகிருர்கள் போலத் தெரிகிறது. இதனை உடனே விசாரித்து நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று வவனியா எம். பி. திரு தா. சிவசிதம்பரம், வடமாகாண பொலிஸ் அதிபருக்கு அனுப்பிவைத்துள்ள தந்தியில் கேட்டுள்ளார்.

---

## பி. ஸி. ஜி. ஊசி மருந்து இறக்கம்

பங்களூர். ஜன. 16.

பி. ஸி. ஜி ஊசி மருந்து ஏற்றும் இயக்கத்தை வீடு வீடாகச் சென்று நடத்தவேண்டுமென்று பங்களூரில் நடைபெற்று முடிவடைந்த பி. ஸி. ஜி. மகாநாடு ஒரு தீர்மானத்தின் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது. குழந்தைகளுக்கு பி. ஸி. ஜி. ஊசி மருந்து ஏற்ற வேண்டுமென்று மகாநாடு கேட்டுக் கொண்டது.

# இந்தோனேஷிய படகுமீது பீரங்கிச் சூடு

## யு. தாண்ட் கவலை

நியுயோர்க், ஜன. 16

மேற்கு இரியான் கரையோரத்தில் இந்தோனேஷியப் படைகளுக்கு டச்சுக்காரர் பீரங்கியால் சுட்டதாகவும் ஒரு படகு எரிந்துவிட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

ஆனல் இச்சம்பவம் பற்றி இதுவரை இந்தோனேஷிய தரப்பிலிருந்து எவ்வித அறிவித்தலும் கிடைக்கவில்லை.

சூட்டுச் சம்பவம் பற்றி ஐ. நா. பதில் தலைமைக்காரியதரிசி யு தாண்ட் இந்தோனேஷிய அதிபருக்கும் டச்சுப் பிரதமமந்திரிக்கும் கவலை தெரிவித்து தந்திச்செய்தி அனுப்பியுள்ளார்.

மேற்கு இரியன் பிரச்னை அமைதியான முறையில் தீர்க்கப்படவேண்டுமென்ற தமது யோசனையை யு தாண்ட் தமது தந்திச்செய்தியில் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

மேற்கு இரியன் பிரச்னைக்கு சமாதானமான முறையில் தீர்வு காண்பதற்கு அமெரிக்கா இன்னமும் முயற்சி செய்து வருகிறதென்று அமெரிக்க ஜனதிபதி திரு. ஜோன் எப். கென்னடி நிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்தார்.

# "தேர்தலே நடத்தாதநாடு வாக்கெடுப்புபற்றிப் பேசுவதா?"

## பாகிஸ்தான் பற்றி இந்திய அறிக்கை

புதுடில்லி, ஜன. 16

"பாரதப் பிரதேசத்தில் மேலும் உரிமை கொண்டாடவோ, பாரதப்பிரதேசத்தில் மேலும் ஆக்கிரமிப்பு நடத்தவோ, காஷ்மீரை ஒரு களமாக பாகிஸ்தான் உபயோகிப்பதற்கு அனுமதிக்க முடியாது" என்று காஷ்மீர்பற்றி இந்தியா வெளியிட்டுள்ள ஒரு அறிக்கை கூறுகிறது

1947-ம் ஆண்டில் காஷ்மீர் தோன்றிய விதம் தொடக்கம் அதன் விபரம் யாவும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"பாகிஸ்தான் ஒரு நல்ல அயல் நாடாக இருக்கவேண்டுமென்றே இந்தியா சென்ற 14 ஆண்டுகளாக நல்ல முறையில் நடந்து சலுகை காட்டி வந்துள்ளது" என்று அந்த அறிக்கை கூறுகிறது.

பாகிஸ்தானில் ஆட்டங்கொடுக்கும் அரசாங்கம் ஒவ்வொன்றும் தங்கள் ஆட்சியை நிறுத்தி வைத்துக்கொள்வதற்காக காஷ்மீர் பிரச்சினையை கிளப்பி பாகிஸ்தான மக்களின் கவனத்தைத் திருப்ப வந்துள்ளது என்றும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

"காஷ்மீர் விஷயத்தில் பாகிஸ்தான் சுயநிர்ணய உரிமைபற்றியும் சர்வ ஜனவாக்கெடுப்பு பற்றியும் பேசுகிறது சென்ற 14 ஆண்டுகளில் ஒரு பொதுத் தேர்தல் கூட நடத்தாத பாகிஸ்தான் வாக்குரிமை பற்றிப பேசுவதற்கு வாயேது?" என்று அந்த அறிக்கை கூறுகிறது.

ஜம்மு காஷ்மீரில் பலாத்காரமாக ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் பிரதேசத்தை விட்டு பாகிஸ்தான் வெளியேறவேண்டுமென்று அந்த அறிக்கை கூறுகிறது.

---

## டென்மார்க் பிரதமர் இந்தியா வருகிருர்

புதுடில்லி, ஜன. 16

டென்மார்க் பிரதம மந்திரி வியாழக்கிழமை புதுடில்லி வந்து சேர்கிருர். இந்தியாவில் 21 தினங்கள் சுற்றுப் பிரயாணம் செய்யவிருக்கும் டென்மார்க் பிரதம மந்திரி கோஷ்டியினர் பம்பாய், ஆக்ரா, கல்கத்தா, மைசூர், பங்களூர் ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்வர்.

---

## இரு ஆசிரியர்களுக்கு வேலை இல்லை

கொழும்பு, செய்வாய்

தர்மசோகா கல்லூரி ஜனவரி மாதம் 2-ம் திகதி ஆரம்பமான போது அங்கு நியமனம் செய்யப்பட்ட இரு பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்களுக்கும் இதுவரை எதுவித வேலையும் வழங்கப்படவில்லை.

அங்கிருந்து இடமாற்றம் செய்யப்பட்ட இரு எஸ். எஸ். ஸி தராதரப் பத்திரம் பெற்ற ஆசிரியர்களுக்குப் பதிலாகவே இவர்கள் அங்கு நியமிக்கப் பட்டவர்கள். ஆனல் எஸ். எஸ். ஸி தராதரப் பத்திரம் பெற்ற ஆசிரியர்களுக்கு முதலில் அனுப்பப்பட்ட இடமாற்ற உத்தரவு பின் ரத்துச் செய்யப்பட்டது. இதன் காரணமாகவே இந்தநிலை ஏற்பட்டுள்ளது

# தலைவர்கள் சூருவளிசுற்றுப்பிரயாணம்

## தேர்தல்களத்தில் 'ஆகாஷ்வாணி'

தமிழ்நாடு 206 சட்டசபைத் தொகுதிகளுக்கும், 41 பார்லிமெண்ட் தொகுதிகளுக்குமான தேர்தல்கள் பெப்ரவரி 17, 19, 21, 24-ந் திகதிகளில் நடைபெறவிருக்கின்றன.

### தமிழ்நாட்டில் ஆகாஷ்வாணி

தன் தேர்தல் பிரசாரத்துக்கு வானொலியைப் பயன்படுத்துவதில்லையென தி. மு. க. முடிவு செய்துள்ளது. வேறு 15 கட்சிகளுடன் தி. மு. கவுக்கும் இந்த வசதியை அளிக்க தேர்தல் கமிஷன் முடிவு செய்திருந்தது ஆகாஷ்வாணி யென்ற பெயரை வானொலி என்று மாற்ற வேண்டுமென்ற தனது முன்னைய கோரிக்கையை முன்விட்டு, தேர்தல் பிரசாரத்திற்கு அகில இந்திய வானொலி வசதியைப் பயன்படுத்துவதில்லையென தி. மு. க. முடிவு செய்துள்ளது.

காலங்கடந்த இந்த நேரத்திலும் கூட தி. மு. க. வுடன் உடன்பாடு செய்துகொள்வதற்குப் பொதுவுடைமைக்கட்சி தயாராக இருக்கிறது என்று தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சியின் செயலாளரான திரு. எம். ஆர். வெங்கட்ராமன் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### தலைவர்கள் சூருவளி சுற்றுப்பயணம்

தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பல்வேறு தலைவர்களும் நாடுமுழுவதும் தேர்தல் பிரசாரத்திற்காக சூருவளிப் பிரயாணத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். இப்பிரயாணத்தின்போது முக்கிய சந்திப்புகளும் உடன்பாடுகளும் ஏற்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# தமிழகமும் பொதுத்தேர்தலும்

ஆகாஷ்வாணி என்பதற்குப் பதில் வானொலி என்றழைக்கப்படவேண்டுமென தமிழ்நாடு முழுவதுமே அன்று பெரிய போராட்டம் நடைபெற்றதும் பல கட்சிப்பற்றற்ற பெரியோர்கள் இப்போராட்டத்திற்கு தலைமை தாங்கியதும் நாடறிந்த விஷயம். இப்போராட்டத்தின் விளைவாக ஆகாஷ்வாணியை யடுத்து வானொலி என்பதையும் சேர்த்துக்கொண்டது அரசாங்கம். ஆகாஷ்வாணி முற்ருக நீக்கப்படவில்லையென்பதற்காக தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரபல கலைஞர்கள், அறிஞர்கள் இந்திய வானொலியில் பங்கு பற்ருது இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

பொதுத்தேர்தல் நடைபெறும் இவ்வேளையில் தி. மு. க. வின் மேற்கண்ட முடிவு தேர்தல் களத்தில் ஓர் சிறு ஆயுதமாகப் பயன்படுத்தப்படலாம். இதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டிலுள்ள ஏனைய சில அரசியல்கட்சிகளும் வானொலிப் பகிஷ்கரிப்பை ஆதரித்தால் வியப்படைவதற்கில்லை! ஆனல் பல இயக்கங்கள் இந்த முடிவுக்கு ஆதரவளிக்குமென்பது உண்மை.

திராவிடமுன்னேற்றக்கழகம் தனது அபேட்சகர்களின் மூன்ருவது பட்டியலை வெளியிட்டிருக்கிறது.

### தில்லைவில்லாளன்

பார்லிமெண்ட் தொகுதிகளில் சிதம்பரத்திற்கு தில்லைவில்லாளனும், ஈரோடுக்கு உடுமலை நாராயணனும், ஸ்ரீபெரும்புதூருக்கு பி. சிவசங்கரனும், பழனிக்கு எஸ். ஷேக்கும தி மு. க. அபேட்சகர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

### உத்தனகிரி

உத்தனகிரி சட்டசபைத் தொகுதிக்குப் போட்டியிட ஸ்ரீ ஜெயராமனைத் தமிழ்த் தேசியக்கட்சி தேர்ந்தெடுத்திருக்கிறது.

### தி. மு. க. – கம்யூனிஸ்ட் உடன்பாடு?

தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சி அபேட்சகர்களின் மூன்ருவது பட்டியலை வெளியிட்டுள்ளது இப்பட்டியலுடன் பொதுவுடைமைக்கட்சி 64 சட்டசபை இடங்களுக்கும் 10 மக்கள்சபை இடங்களுக்கும் அபேட்சகர்களை அறிவித்துள்ளது

இப்பட்டியலில் அறிவிக்கப்பட்டிருப்பவர்களோடு பொதுவுடைமைக் கட்சியும் தி. மு. க. வும் 30 இடங்களில் ஒன்றினையொன்று எதிர்த்துப் போட்டியிடுகின்றன.

விருதுநகருக்கு முதலமைச்சர் காமராஜர் அண்மையில் விஜயஞ்செய்தார். அங்கு எதிர்க்கட்சிப் பிரமுகர்களைச் சந்தித்து காங்கிரசுக்கு வாக்களிக்குமாறு கேட்டிருக்கிருர். நகரசபைத்தலைவர் திரு. எம். எஸ். பி. இராசா அளித்த விருந்திலும் கலந்து கொண்டார். திரு. இராசா நகரசபைத் தேர்தலில் காங்கிரசை எதிர்த்து வெற்றிபெற்றவர். அவர் அப்போது தி. மு. க. அனுதாபியாகவிருந்தார்

---

### தாக்குதல்கள்

முதலமைச்சர் காமராஜர் ஓர் பிரசாரக் கூட்டத்தில் பின்வருமாறு பேசியுள்ளார்:

"நாட்டில் சில எதிர்க்கட்சிகள் இத்தகைய திட்டமிட்ட வளர்ச்சியை ஆதரிக்கவில்லை. தாங்களாகவே சில திட்டங்களை அவர்கள் உருவாக்கிக் கொண்டு திட்டம் சரியில்லை என்று எதிர்க்கிருர்கள்.

இவ்வாறு திட்டங்களை எதிர்ப்பவர்கள் நாட்டின் வளர்ச்சிக்குப் பெரும் முட்டுக்கட்டைகளாவர். இவர்கள் நாட்டு வளர்ச்சியில் அக்கறையின்றி காங்கிரசைக் குறை கூறுவதன் மூலம் தேர்தலில் செல்வாக்குப் பெற நினைக்கிருர்கள். இத்தகையவர்களை நாட்டு மக்கள் நம்பக்கூடாது.

உண்மையாகவே நாட்டின் நலனுக்காகப் பாடுபடும் காங்கிரசை மக்கள் ஆதரித்து காங்கிரசின் வெற்றிக்கு அடிகோலவேண்டும்"

### நாவலர் நெடுஞ்செழியன்

தி மு. க. வைச் சேர்ந்த நாவலர் நெடுஞ்செழியன் பின்வருமாறு கூறுகிருர்:

"காங்கிரஸ் கட்சி கொள்கையையோ குறிக்கோளையோ, பண்பையோ பணியையோ, காட்டி வாக்குச் சீட்டு வாங்க முனையாமல் சாதியையும் பணத்தையும் காட்டி வாக்குச் சீட்டுப்பெற முற்பட்டிருக்கிறது. இன்றைய நிலையில் காங்கிரஸ் கட்சி எப்படிப்பட்ட ஆயுதங்களை உறுதுணையாகக் கொண்டு தேர்தல் காலத்தில் இறங்கியிருக்கிற தென்ருல், இழிசெயல், வன்முறை, சாதி வெறி, பணபலம் ஆகியவற்றை நம்பித்தான் இறங்கியிருக்கிறது. தேர்தல் ஒழுங்குமுறைகளைப் பொறுத்துக் காங்கிரசின் சொல் ஒன்று; செயல் நேர்மாருன வேருென்று."

## மணி வாக்கு

'கடமையாகிய பாதையே செம்மையின் பாதை. செம்மையாகிய பாதை மாத்திரமே நித்திய அமைதிக்கும் ஆனந்தத்துக்கும் வழி'


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு
தை மீ 4உ (17 - 1-62

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389


## விவசாய விருத்தி!

விவசாய விருத்தியில் இலங்கை அரசாங்கம் எத்தனையோ ஆண்டுகளாக மிகுந்த அக்கறை காட்டி வருகின்றது. அரசாங்க சபையில் பெரிய சேனநாயக்கா மந்திரிப் பதவி வகித்த காலத்தில் விவசாய விருத்திக்காகப் பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டதுமன்றி அதற்காக லட்சக்கணக்கில் பணமும் செலவிடப்பட்டது. இதற்காகக்காக வெளிநாடுகளிலிருந்து பெருவாரியான யந்திர சாதனங்களும் வரவழைக்கப்பெற்றன. இவ்வாறு அரசாங்கம் பணத்தை வாரி இறைப்பதை மக்களின் பிரதிநிதிகள் அவ்வளவாக ஆட்சேபிக்கவில்லை. நாட்டில் உற்பத்தி பெருகுமானல் அது நாட்டின் விருத்திக்குப் பேருதவியாக இருக்குமென அவர்கள் நம்பியதில் தவறு எதுவுமில்லை.

நாட்டின் பொருளாதார விருத்தியையும் மக்களின் நல்வாழ்வையும் அடிப்படையாகக் கொண்டுதான் பத்தாண்டுத் திட்டமும் வகுக்கப் பெற்றது. அப்படியிருந்தும் போதிய அளவுக்குக் கைத்தொழில்களும் விவசாயமும் தேசிய வருத்திக்கு உதவவில்லையென்ற அபிப்பிராயமே நாட்டில் நிலவி வருகின்றது. இந்நிலையில் விவசாய இலாகா அபிவிருத்தித் துறையில் செய்துவரும் வேலைகளைப் பற்றி விரிவான முறையில் ஆராய வேண்டுமென் தீர்மானம் ஒன்று செனெட் சபையில் விவாதிக்கப்படவிருப்பது பெரிதும் வரவேற்கத் தக்கதாகும்.

வாழ்க்கைச் செலவு விஷம் போல ஏறிக்கொண்டிருக்கும் இந்நாட்களில் விவசாய விருத்திக்காக செலவாகும் தொகை போதிய வருவாயை அளிக்காதயின் அதனால் பொது மக்களே பாதிக்கப்படுவார்கள். தவிர தேசிய அபிவிருத்தியென்ற பெயரிலும் பொது மக்களிடம் அரசாங்கம் வரி வசூலித்து வருகின்றது. திட்டங்களை மட்டும் தீட்டாது அவற்றை இலாபகரமான முறையில் செயற்படுத்தவும் முயல வேண்டும். அதனுடன் அவற்றுக்காகச் செலவாகும் பணம் நாட்டின் விருத்திக்குப் பயன்படவும் வேண்டும். இந்த அழவில் விவசாய இலாகா செய்துவரும் வேலைகளை விரிவாக ஆராய்வதில் அரசாங்கம் சிரத்தையெடுப்பது அவசியமானதொன்றாகவே தோன்றுகின்றது.

## நஷ்டத்தில் ஓடும் ரயில்வே

ரயில்வே பிரயாணிகளின் தொகை 1960-ம் ஆண்டில் சுமார் ஐந்து லட்சம் அதிகரித்திருந்த போதிலும் இலங்கை ரயில்வே நஷ்டத்திலேயே ஓடுகின்றதென ரயில்வே இலாகா வெளியிட்டுள்ள 1960-ம் ஆண்டுக்குரிய அறிக்கை கூறுகின்றது. எந்த வருடத்திலாவது இலங்கை ரயில்வே இலாபம் அடைந்ததில்லை. ஒவ்வோர் ஆண்டும் நிர்வாகச் செலவுகள் அதிகரித்துக் கொண்டு வருவதால் இவ்வாறு நஷ்டம் ஏற்படுவது இல்லை. தவிர, வருமானத்துக்கேற்பச் செலவு திட்டமிடப்பட்டு வருவதாயுமில்லை.

ஊழியர்களின் சம்பள வகையில் மட்டும் 1959-ம் ஆண்டிலும் பார்க்க 1960-ம் ஆண்டு 13 லட்சம் ரூபாய் உயர்ந்திருக்கிறது. விஷமத்தனமான வேலைகளும், விபத்துக்களும் இடையிடையே நடைபெறுவதினாலும் வருமானத்துக்கேற்ற வகையில் செலவினங்களைக் கட்டுப்படுத்த முடியாமல் போய்விடுகின்றது. எதிர்பாராத முறையில் நடைபெறும் இச்சம்பவங்கள் தவிர்க்க முடியாதவையே.

நாட்டின் செல்வத்தை மகா யாமாகிக் கொண்டிருக்கும் வகையில் ரயில்வேயின் நஷ்டத்தையும் சமாளிப்பது அரசாங்கத்துக்கு மிகச் சிரமமாகவேயிருக்கும். பொது மக்களின் போக்குவரத்துக்குப் பயன்பட்டுவரும் ரயில்வே நஷ்டமடைவதை எவரும் விரும்பமாட்டார்கள். அதனைமக்களும் உணர்ந்து செயலாற்றுவார்கள் என நம்புகின்றோம்.

# 'ஜி. ஸி. ஈ. மாணவர்களை வெளியேற்றவேண்டாம்'

### பாடசாலை அதிபர்களுக்கு வித்தியாதிபதி உத்தரவு

கொழும்பு, செவ்வாய்

ஜி. ஸி. ஈ. பரீட்சைக்கு ஒரு தடவைதோற்றி பரீட்சைமுடிவுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவர்கள் எவரையும் கட்டாயமாகப் பாடசாலைகளிலிருந்து வெளியேற்றுதிருக்கும்படி வித்தியாதிபதி திரு. எஸ். எவ். டி' சில்வா, சகல பாடசாலை அதிபர்களையும் கேட்டுள்ளார். எச். எஸ். ஸி வகுப்பில இடமில்லாதிருந்தாலும்' பாடசாலையில் எச். எஸ். ஸி வகுப்பில்லாதிருந்தாலும், இந்த மாணவர்களுக்கு ஜி. ஸி. ஈ வகுப்பில் இருந்துபடிப்பதற்கு அனுமதி வழங்கும்படி அதிபர்களை அவர் கேட்டுள்ளார்.

1961-ம் ஆண்டு இறுதியில் ஜி. ஸி ஈ. பரீட்சைக்குத் தோன்றிய மாணவர்கள் பலரைச் சில அதிபர்கள் பாடசாலையிலிருந்துவிலக்கிவிட்டதைத் தொடர்ந்தே வித்தியாதிபதி பிரஸ்தா புதிய உத்தரவைப் பிறப்பித்துள்ளார். ஜி. ஸி. ஈ. இறுதிவகுப்பில் இருவருடங்களேனும் படிக்காத மாணவர்களையும் அதிபர்கள் பாடசாலையிலிருந்து நீக்கியுள்ளதை வித்தியாதிபதி அதிபர்களுக்குச் சுட்டிக் காட்டியுள்ளார்!

### சென்ற ஆண்டு நியதி

கடந்த ஆண்டில் தாம் பிறப்பித்த நியதி ஒன்றையும் வித்தியாதிபதி அதிபர்களுக்குச் சுட்டிக்காட்டியுள்ளார். ஜி ஸி ஈ ஆயத்த வகுப்பில் எத்தனை வருடங்கள் படித்திருந்தாலும், ஜி ஸி. ஈ. இறுதி வகுப்பில் இரு வருடங்கள் படிக்கும் உரிமை ஒவ்வொரு பிள்ளைக்கும் வழங்கப்படவேண்டும். எனச்சென்ற ஆண்டில் வித்தியாதிபதி பள்ளிக்கூட அதிபர்களுக்கு அறிவித்திருந்தார். ஒவ்வொரு பிள்ளையும் மூன்றுதடவை ஜி ஸி ஈ. பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இந்த உத்தரவு இடமளித்திருந்தது.

ஜி. ஸி. ஈ. பரீட்சை முடிவைக்காத்திருக்கும்பிள்ளைகளை எச். எஸ் ஸி ஆயத்த வகுப்பில் படிக்க அனுமதி வழங்குமாறும் எச்.எஸ் ஸி. வகுப்புபாடசாலையில்இல்லாவிட்டால் ஜி ஸி ஈ. வகுப்பிலேயே தொடர்ந்தும் படிக்க அனுமதி வழங்குமாறும் வித்தியாதிபதி அதிபர்களைக் கேட்டுள்ளார். கலைப்பகுதியை சேர்ந்த எத்தனை மாணவர்களும் விஞ்ஞான பகுதியைச் சேர்ந்த எத்தனைமாணவர்களும் வெளியேற்றப்பட்டனர் என்றும் அவர் விபரம் கேட்டுள்ளார்.

### வெளியேற்றப்பட்டோர் விபரம்

1961 இறுதியில் பள்ளிக்கூடத்திலிருந்து நீக்கப்பட்ட 18 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள்பற்றிய விபரங்களை 3 நாட்களில் தமக்கு அனுப்பி வைக்குமாறும் வித்தியாதிபதி பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளார்.

## 16 அம்புலன்ஸ் வாகனங்கள்

### உபயோகத்துக்கு உதவாது

கொழும்பு, செவ்வாய்

"பெரும் தொகையான ஆஸ்பத்திரி அம்புலன்ஸ் வாகனங்கள் பழுதடைந்துள்ளதாகவும் ஆஸ்பத்திரிப் பொருள்களை ஏற்றிச் செல்வதற்கு இதை உபயோகப்படுத்துவதாலேயே இந்த நிலை ஏற்பட்டதாகவும் தெரிகிறது.

இவ்விதம் பொருள்களைச் சுமந்து செல்ல இந்த வாகனங்களைப் பயன்படுத்தக் கூடாதென சுகாதார சேவை டைரக்டர் உத்தரவிட்டுள்ளார்.

சுகாதார டைரக்டர் இது சம்பந்தமாக அறிவித்திருப்பதாவது:-

'இந்த வாகனங்களைக் கொண்டு பொருள்களை ஏற்றிச் செல்வதால் அடையும் இலாபத்தைவிட நஷ்டம் அதிகம். இதனல் மோட்டார் வாகனங்களுக்கு அதிக சேதம் ஏற்படுகிறது.'

சென்ற வருடம் சுகாதார இலாகாவுக்குச் சொந்தமான 16 அம்புலன்ஸ் வாகனங்கள் அதிக சேதமடைந்ததால் பாவனைக்கு லாயக்கற்றவையென ஒதுக்கப்பட்டன.

# இன்றையநிலை குறித்து அரசாங்கம் வெட்கப்படவேண்டும்

— திரு. ஆர். ஜி.

தம்பதெனியா, செவ்

"நாட்டின் சரித்திரத்திலேயே இன்றுதான் பெரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. கபடமுள்ள அரசியல்வாதிகள் சிலரின் கொடூரமான யோசனைகளின்படி அரசாங்கம் நடந்து வந்துள்ள காரணத்தாலேயே நாட்டுக்கு அன்றைய பரிதாபநிலை ஏற்பட்டது."

இவ்வாறு தம்பதெனியா எம். பி. திரு. ஆர் ஜி. சேனநாயக்கா தம்பதெனியாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர். தொடர்ந்து பேசுகையில் அவர் கூறியதாவது:

"இலங்கையின் தேயிலை, ரப்பர், தேங்காய் ஆகியவை வெளிநாட்டுச் சந்தையில் சமது மதிப்பை இழந்துள்ளன. இவைதான் நாட்டுப் பொருளாதாரத்தின் உயிர் நாடிகள். இவற்றுக்கு வெளிச் சந்தையில் கிராக்கி குறைந்துள்ளதால் நாட்டின் பொருளாதாரம் இன்று படுமோசமாகியுள்ளது. லஞ்ச ஊழல்களும் கள்ளத்தனமான பழக்கங்களும் அரசாங்கத்திடம் மலிந்து காணப்படுகின்றன. நாட்டின் நிலைமைகளை மோசமாக்கிய அரசாங்கம், தன்னையிட்டு வெட்கப்பட வேண்டும்.

# "வானமே இறங்கிவந்தாலும் அரசாங்கம் விழாது"

— மந்திரி சமரவீரா

மாத்தளை, செவ்வாய்

'வானமே கீழிறங்கி வந்தாலும் அரசாங்கம் விழுந்துவிடாது. என ஸ்தலஸ்தாபன வீடமைச்சு மந்திரி திரு. மகாநாமசமரவீரா மகாவெலியில் வீடமைப்புத் திட்டத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மார்க்ஸியவாதிகளின் தாளத்துக்கோ அன்றி முதலாளி வர்க்கத்தின் தாளத்துக்கோ அரசாங்கம் ஆடாது.

அரசாங்கம் தனது நிர்ணயிக்கப்பட்ட காலஎல்லை முடிவுறும் நேரத்தில் மக்களுக்கு தேவையானவற்றைக் கொடுக்கும். அப்படிச் செய்யாவிடில், அதற்குரிய பதிலை அளிப்பது மக்களின் பொறுப்பு.

### ரூ. 5,000 கடனுதவி

வீடுகட்டிக் கொள்வதற்காக அரசாங்கம் தற்பொழுது ரூ 2,000 கடனுதவி வழங்குகிறது. விரைவில் ரூ. 5,000 கடனுதவியாக வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதனல் 1959-ம் வருடத்துக்குப் பின்னர் ஈடுவைக்கப்பட்ட காணிகளைத் திருப்பிப் பெறக்கூடியதாக இருக்கும்.

முதலாளிவர்க்கத்தைச் சேர்ந்த ஒருவர் தமக்குச் சொந்தமான காணியைப் பிரயோசனப் படுத்தாமல் வைத்திருந்து அந்தக் காணியில் ஏழைகள் வீடுகட்டிக் கொள்ளலாமென கண்டால் பத்துப்பேர் கையொப்பமிட்ட ஒரு பெட்டிஷன் போதும். அந்தக் காணியை ஏழைமக்கள் பெற்றுக்கொள்ளலாம்'

### இ. போ. ச. ஊழியர்கள்

இ. போ. ச. ஊழியர்கள் பற்றி மந்திரி குறிப்பிட்டுப் பேசுகையில் கூறியதாவது:

'பஸ் சேவை தேசியமயமாக்கப்படுமுன்னர், கம்பனி முதலாளிகளின் கீழ் வேலை செய்யும்போது தொழிலாளர்கள் குறைந்த சம்பளத்தைப் பெற்று மிருகங்களோடு கேவலமாகவும் நடத்தப்பட்டனர். ஆனல் அப்பொழுது அவர்கள் தமது முதலாளிகளை எதிர்த்து ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. இப்பொழுது கண்டக்டர்களும் சாரதிகளும் 250 ரூபாவோ அதற்கு அதிகமாகவோ மாதச் சம்பளமாகப் பெறுகிறார்கள். இருந்தும் அரசியல் வாதிகளின் கையில் சிக்கி அரசாங்கத்துக்கு தொல்லை கொடுக்கின்றனர்.

### துறைமுகத் தொழிலாளர்கள்

துறைமுகத் தொழிலாளர்கள் பொதுமக்களுக்கு மிகவும் கஷ்டத்தைக் கொடுக்கின்றனர். இராணுவத்தினர் சேவை செய்தபடியாலேயே பொதுமக்கள் உருளைக்கிழங்கையும் வேறு பொருள்களையும் கட்டுப்பாட்டு விலைக்கு வாங்கக்கூடியதாக இருந்தது.

### இலங்கையர்கள் சோம்பேறிகள்

ரத்தோட்டை எம். பி. திரு. சந்திரசேன முனவீரா பேசுகையில் கூறியதாவது:

'நான் ஐரோப்பா இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கு

(5-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

இரண்டே நாள் நோட்டீஸ் தான். இந்தியாவுக்குப் புறப்பட எல்லா ஏற்பாடுகளும் செய்யவேண்டும். நேரே எக்ஸ்சேஞ்ச் கன்ட்ரோலுக்குச் சென்றேன். "இன்கம் டாக்ஸ் கிளியரன்ஸ்" வேண்டுமென்றார்கள். வருமானவரி ஆபீஸுக்குச் சென்று கேட்டதில் அவர்கள், சென்ற ஆண்டுக்கு வரி செலுத்த வேண்டியிருக்கிறதென்று கூறவே, அதை செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொண்டு, எக்ஸ்சேஞ்சுக்கு வந்தேன்.

அங்கிருந்த அதிகாரி என் பாஸ்போட்டைப் பார்த்தார். இந்தியாவுக்குச் செல்லும் பத்திரிகை பிரதிநிதிகள் கோஷ்டிக்கு எல்லா உதவிகளும் அளிக்க வேண்டுமென்று தங்களுக்கு மேலிடத்திலிருந்து உத்தரவு வந்திருப்பதாயும், ஆனல் எனக்குரிய 'எக்ஸ்சேஞ்சை' பயன்படுத்தி விட்டதால், ஒன்றும் கொடுக்க முடியாமலிருப்பதாயும் மிக வருத்தத்துடன் சொன்னர்.

* * *

ஒன்றும் பேசாமல் அவரைப் பார்த்துச் சிரித்தேன். இந்திய அரசாங்கத்தின் விருந்தாளியாகச் செல்லுவதால் எல்லா செலவுகளையும் அவர்கள் பார்த்துக்கொள்வார்கள் என்று சொல்லிவிட்டு, கைச்செலவுக்கு நூறு ரூபாயாவது கொடுக்கலாமா? என்று மேலதிகாரிக்கு டெலிபோன் செய்தார். ஒன்றும் முடியாதென்று பதில் வரவே, மிக வருத்தத்துடன், பாஸ்போட்டை திருப்பிக் கொடுத்தார். இந்தப் பதிலை எதிர்பார்த்தே சென்றதால் இது எனக்குச் சிறிதும் ஏமாற்றமளிக்கவில்லை.

சட்டம் அப்படி இருக்கையில் பாவம் அந்த அதிகாரியைக் குறைகூற முடியுமா? சட்டமோ ஒரு கழுதை! கோடிக்கணக்கான பணம் வீணாக வெளியேறுகிறது. ஆனல் வெளிநாட்டுக்கு, அரசாங்க அழைப்பின்மீது செல்லும் ஒரு பேப்பர்காரனுக்கு ஒரு சதமும் கைச்செலவுக்குக் கொடுக்க மறுக்கிறார்கள்! "எல்லா உதவிகளும்" அளிக்கும் லட்சணம் இது! நாட்டின் செல்வத்தை இவ்வளவு கண்ணும் கருத்துமாகப் பாதுகாக்கும் நிதிமந்திரியைப் பெரிதும் பாராட்டுகிறேன்.

* * *

ஆனல் சென்ற வருடம் விமானத்தில் சென்றுவிட்டதால், இன்னும் 4 வருடத்துக்குச் செல்ல முடியாதென்று கூறுவார்களோ என்று மனதில் சந்தேகமிருந்தது. நல்லவேளை. அப்படி தடை எதுவும் போடவில்லை. இந்திய அரசாங்கம் 'இந்திய ஏர் லயன்ஸில்' சென்று திரும்ப ரிட்டர்ன் டிக்கெட்டுக்கு ஏற்பாடு செய்ததாலும், இதில் இலங்கை 'எக்ஸ்சேஞ்ச்' விரயமாகவில்லையாதலாலும், கருணையுடன் அனுமதித்து விட்டார்கள்.

ஆனல் அரிசிக் கூப்பன் கொடுத்து அதற்கு ரசீது பெற வேண்டும். மூன்று மணி தவம் கிடந்து அது கிடைத்தது. பின்னர் 'ஏர் இந்தியாவில்' ரெடியாகக் காத்திருந்த விமான டிக்கெட்டை பெற்றுக் கொண்டு திரும்பினேன்

* * *

சனிக்கிழமை மாலை இந்திய ஹைகமிஷனர், தமது வாசஸ்தலத்தில், 6 பிரதிநிதிகளுக்கும் 'டிரிங்க்ஸ்' கொடுத்தார். என்னுடன் யாரார் வருகிறார்கள் என்பதை அப்போது தான் முதல் முதல் அறிந்தேன்.

'டைம்ஸ்', 'சுலமின' 'தவஸ', 'சிங்களே', 'ஈழநாடு' இந்நான்கு பத்திரிகைகளுக்குத்த அழைப்பு இருந்தது 'ரேடியோ ஸிலோன்' பிரதிநிதி முடிவு ஆயிம்கள்களுடன இந்திய ஹைகமிஷனின் தகவல் அதிகாரி

(5ம பக்கம் பார்க்க)

# படித்தவாலிபர்கள் கைத்தொழிலில் ஈடுபடவேண்டும்

## ஆண்டுவிழாவில் காரியாதிகாரி பேச்சு

நெல்லியடி, செவ்வாய்

"இளைஞர்கள் கற்ற கல்வியுடன் மாத்திரம் நின்றுவிடக்கூடாது. நமது நாட்டின் பொருளாதாரநிலை மிக மோசமாகிக்கொண்டிருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிக்கொண்டு வருகிறது. ஆதலால் கல்வி கற்று முடிந்ததும் வாலிபர்கள் கைத்தொழிலில் ஈடுபடவேண்டியது அவசியம்."

இவ்வாறு பொங்கலன்று கரவெட்டி கிழக்கு வளர்மதி சனசமூக நிலையத்தில் நடைபெற்ற 5-வது ஆண்டுவிழாவில் பேசும்போது வடமராட்சி காரியாதிகாரி திரு. ஜே. டி. ஆர்னல்ட் குறிப்பிட்டார்.

விழாவுக்கு சைவப்புலவர் எஸ். வல்லிபுரம் தலைமை வகித்தார்.

காரியாதிகாரி தொடர்ந்து பேசியதாவது:-

இத்தொகுதி மக்கள் மட்டுமல்ல இலங்கையிலுள்ள அத்தனை மக்களும் சாதிமத வேறுபாடின்றி சிங்களவர், தமிழர், முஸ்லிம் என்ற பாகுபாடின்றி ஒற்றுமையாக வாழவேண்டுமென்று விரும்பினர். கம்யூனிஸ்கட்சி அங்கத்தவரும் காலஞ்சென்ற பாராளுமன்ற உறுப்பினருமாகிய திரு. பி கந்தையா. அவரைப்போல காலஞ்சென்ற தர்மகுலசிங்கமும் எளிய மக்களுக்காக தன் வாழ்வை அர்ப்பணித்தார்.

பொது ஸ்தாபனங்கள் மூலம்தான் நாம் முன்னேறலாம். இப்படியான முன்னேற்றத்திற்கு அரசாங்கத்தின் மூலம் என்னாலான பணியைச் செய்ய நான் என்றும் முன்னிற்பேன் என்பதைத் திட்டவட்டமாகக் கூறுகிறேன்.

திரு. க. நாகமுத்து பேசியதாவது:-

மானிய முறை ஆட்சியிலிருந்து படிப்படியாக அரசியல் நிலை இன்றைய வரை எவ்வளவோ மாறிக்கொண்டு வருகிறது. விதானைமார் முறையிலிருந்து கிராமசேவகர் முறையாக இன்று மாறிவிட்டது. இது வரவேற்கத்தக்கது.

நெசவுத் தொழில், தச்சுத் தொழில் போன்றவற்றின் மூலம்தான் நம்போன்ற படித்த வாலிபர்கள் பிற்கால வாழ்க்கையை வளம் பெறத்தக்கதாக மாற்றி அமைக்கலாம்.

திருவாளர்கள்: கே. டானியல், எம். கே. அந்தனிசில், எம். செல்லத்தம்பி, ஏ. சிறில், பி. தம்பிமுத்து, வி. பாலசிங்கம். எம். கார்த்திகேசு எஸ். செல்லையா ஆகியோரும் பேசினர்.

# "தமிழ்ப்பிள்ளைகளைச் சேர்க்க அதிபர் மறுத்துவிட்டார்"

## பிரதமருக்கு இ. தொ. காங்கிரஸ் திரு. நாயர் புகார்

எட்டியாந்தோட்டை, ஞாயிறு

"குழந்தைகள் வகுப்பில் 24 பிள்ளைகளையும் ஆரம்ப வகுப்பில் இரண்டு பிள்ளைகளையும் தவிர இதர வகுப்புகளுக்குத் தமிழ்ப் பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்ள எட்டியாந்தோட்டை சென்ட்மேரியல் கல்லூரி அதிபர் மறுத்துவிட்டார். வித்தியாதிபதியின் உத்தரவின்கீழ் அவர் மறுத்துவிட்டார். இந்தப் பாடசாலையில் தமிழ் பிள்ளைகளின் எண்ணிக்கை ஐம்பது சத விகிதத்துக்கும் அதிகமாகி விடுமென்ற காரணத்தினால் தான் இக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருப்பதாக நாங்கள் அறிகிறோம்" என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எட்டியாந்தோட்டை ஜில்லாக் கமிட்டித் தலைவர் திரு. கே. ஜி எஸ். நாயர் பிரதம மந்திரிக்கு அனுப்பிவைத்துள்ள ஒரு தந்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தந்திச்செய்தியை ஊர்ஜிதம் செய்து திரு. நாயர் பிரதமருக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் இவ்வருடத்தில் இதுபோன்ற கட்டுப்பாடுகள் இருக்கமாட்டாதென்று நம்புவதாகத் தெரிவித்துள்ளார்.

தமிழ்ப் பிள்ளைகளை பாடசாலைகளில் சேர்ப்பதில் உள்ள கஷ்டம் காரணமாக எட்டியாந்தோட்டப் பகுதியில் தமிழ்ப் பெற்றோர்கள் பெரும் சங்கடப்படுகின்றனர் என்று திரு. நாயர் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளில் பிள்ளைகளைச்சேர்ப்பதில் பாகுபாடு காட்டும் விஷயத்தில் தலையிட்டு உடனடியாக நடவடிக்கையெடுக்கும்படி திரு. நாயர் பிரதமரைக் கேட்டுள்ளார்.

### ரயில்களில் முதல் வகுப்பை நீக்க கோரிக்கை

கொழும்பு, திங்கள்

ரயில்களில் முதலாவது வகுப்பை நீக்கிவிடுமாறு அகில இலங்கை பொதுசனப்போக்குவரத்து சங்கம் போக்குவரத்து மராமத்து மந்திரிக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் கேட்டுள்ளது.

முதலாவது வகுப்பை நீக்கிவிடுவதும் மூன்றும் வகுப்பை சீர்திருத்துவதற்கு எடுக்கப்படும் முதல் நடவடிக்கையென்றும் முதலாவது வகுப்பு மூலம் வரும் வருமானம் சாதாரண வகுப்புகள் மூலமாக வசூலாகும் பணத்தில், ஒருசதவீதமே என்றும் சங்கத்தின் தலைவர் திரு. டி. அப்பியாபல அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

### 'வானமே இறங்கி...

(4ம் பக்கத் தொடர்ச்சி

விஜயம் செய்தபோது அங்கு மக்கள் சுறுசுறுப்பாக வேலை செய்வதை அவதானித்தேன். ஆனால் இங்கு நம் இலங்கை மக்கள் சுத்த சோம்பேறிகளாக இருக்கிறார்கள். அத்துடன் இங்குள்ளவர்களுக்கு பிறருடன் ஒழுங்காகப் பழகத் தெரியாது.

**வேலை நிறுத்தங்கள்**

இப்பொழுது பொதுமக்கள் கேட்கும் கேள்வி இதுதான்: "நாங்கள் உங்களுக்கு வாக்களித்தோம். நீங்கள் எங்களுக்கு வேலை நிறுத்தங்களைத் தாருங்கள்.

துறைமுக, இ. போ. ச. அரசாங்க சேவை ஊழியர்கள் தம்மிலும் பார்க்க வசதிகுறைந்த வகுப்பினர் இங்கு வாழ்கிறார்கள் என்பதை உணர வேண்டும். கிராமத்தில் வாழும் ஏழைகளைததான் நான் குறிப்பிடுகின்றேன்.

**டாக்டர் என். எம். மும் அரசாங்கமும்**

டாக்டர் என். எம் பேரேராவுக்கோ, டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவுக்கோ அரசாங்கம் விடடுக்கொடுதது விடாது.

-----

### 'தின்பண்டம போதும்'

கொழும்பு, செவ்

இனிப்பு-வகைத் தின்பண்டங்கள் செய்வதற்கான தொழிற்சாலைகளைப் புதிதாக அமைப்பதற்கு வேண்டிய லைசென்ஸ்களை கைத்தொழில் அமைச்சு இனிமேல் வழங்கமாட்டாது.

தின்பண்ட உற்பத்தி வியாபார வேலைகளில் பெருந்தொகையானவர்கள் இறங்கியுள்ள காரணத்தாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஏற்கெனவே உள்ள தின்பண்ட உற்பத்தித் தொழிற்சாலைகளில் 'டொப்பி'கள், ஜீஜீ'ப்ஸ் லாஸேஞ்ஜெஸ் முதலிய பல வகை இனிப்புக்கள் போதிய அளவுக்கு செய்யப்படுகின்றன என்றும் கைத்தொழில் இலாகா தெரிவித்துள்ளது. உற்பத்தி அதிகரிக்கப்பட்டால் பொதுவாக இனிப்பு வகைகளின் மதிப்பு குறைந்துவிடும் என இலாகா கருதுகிறது.

# ரயில் தடம்புரண்ட இடத்துக்கு கோர்ட்டார் விஜயம்

குருநாகல், செவ்

டிசம்பர் 27ம் திகதி இரவு வவுனியாவில் கொழும்பு—யாழ்ப்பாண ரயில், தடம்புரண்டது சம்பந்தமாக 5 பேர் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. ரயில் தடம்புரண்டது சம்பந்தமான விசாரணைகள் குருநாகல் 'அஸைஸ்' கோர்ட்டில் அசைஸ் கமிஷனர் திரு. ஏர்ல் விஜயவர்த்தன முன்னிலையில் நடைபெற்றுவருகின்றன.

இந்த வழக்கில் வை. எம். டிங்கிரி பண்டா, பீட்டர் பியதாசா, வீரசேகரா சைமன், விஜயக்கோன் குணபாலா, டபிள்யு. ஏ. சுமதிபாலா ஆகிய ஐவர் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

முதல்நான்கு குற்றவாளிகளின் சார்பில் வழக்கறிஞர் ஏ. டி. ஹனுக்கும்புருவும், 5ம் குற்றவாளியின் சார்பில் திரு. டபிள்யு. எம். நந்திசேனவும் ஆஜராகியிருந்தனர். புராசிக்கியூஷன் தரப்பில் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. ஐ. விக்ரமநாயக்கா ஆஜராகியிருந்தார்.

குற்றவாளிகள் தடம்புரண்ட ரயிலில் பிரயாணம்செய்த ஆர். ஆர். எட்வார்ட்ஸ் என்பவரை அடித்துக் கொன்றார்கள் எனவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஜூரி விண்ணப்பித்ததன் பேரில் ரயில் தடம்புரண்ட ஸ்தலத்தைக் கோர்ட்டார் சென்று பார்வையிட்டனர்.

### ஜயாறன்

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

வேலை பார்க்கும் ஒரு சிங்கள அதிகாரியும் வருகிறார்.

என்னைத் தவிர மற்ற ஐவரும் சிங்களவர்கள்! இதைப் பார்க்க எனக்கு ஒரு மாதிரியாக இருந்தது. திருவருள் செயல் புரியவில்லை அது புரியாதான் என்ன என்று என் நண்பர் கூறி, 'ஈழநாடு' பத்திரிகையையும் என்னையும் பாராட்டினார்.

### இறை வழிபாடு குன்றியதே அச்சத்துக்குக் காரணம்

—சைவப்புலவர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

"எட்டுக்கிரகங்கள் கூடுவதால் என்ன நிகழுமோ என மக்கள் மனதில் அச்சம் எழுந்துள்ளது. இவ்வித பீதிக்குக் காரணம் இறை வழிபாடும் சமயப் பண்பாடும் குன்றியதே' என சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி கூறினார்.

ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய கூட்டுப் பிரார்த்தனைச் சபையின் ஆறுவது ஆண்டு விழாவும் பொங்கல் விழாவும் ஒன்றாக நடைபெற்றபோதே திரு. வ. கந்தசாமி மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:—

நாம் எல்லோரும் ஒன்றுகூடி இறைவனை வழிபடவேண்டும். அப்பொழுது நாளும் கோளும் நம்மை ஒன்றும்செய்யாது. கந்தர் அலங்காரம் அருளிச் செய்த அருணகிரியார் 'நாளென் செய்யும்' வினைதான் என் செய்யும் எனை நாடிவந்த கோளென்செய்யும் குமரேசர் இருதாளும், சிலம்பும், சதங்கையும் தண்டையும் சண்முகமும் தோளும் கடம்பும் எனக்குமுன்னே வந்து தோன்றிடுனே' என்றுகூறியுள்ளார்.

இதன் பின்னர் இலங்கை வானொலியில் பக்திப் பாடல்கள் பாடும் எஸ். கே. சித்திரவேல் பக்திப் பாடல்கள் பாடினார்.

சைவப்பிரசாரகர் திரு. க. ஆறுமுகம் தவில் வாசித்த தவில் வித்துவான் திரு. ப. தெட்சணாமூர்த்தியைப் பாராட்டிப் பேசினர்.

விநாயகப்பெருமான் முத்துச்சப்பறத்தில் வீதிவலம்வந்தார

# அரசாங்க ஊழியரை தாக்கமுயன்றராம்!

## வழக்கு தள்ளுபடி; எதிரிவிடுதலை

யாழ்ப்பாணம், செவ்வாய்

அரசாங்க ஊழியரொருவரைத் தாக்கியதாகவும் அவருக்குச் செருப்பால் அடிக்க எத்தனித்ததாகவும் குற்றம்சாட்டி இன்னேர் இலாகாவைச்சேர்ந்த அரசாங்க ஊழியர் ஒருவர் மேல் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கில் மாஜிஸ்டிரேட் வழக்கைத் தள்ளுபடி செய்து எதிரியை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியைச் சேர்ந்த வாசல் காவற்காரரான திரு. செல்லையா சின்னத்துரையைததாக்கியதாகவும் செருப்பால் அடிக்க எத்தனித்ததாகவும் கைதொழில் பகுதியைச் சேர்ந்த திரு சபாபதி வேலாயுதம்பிள்ளை மீது குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணம் பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் திரு. எஸ். ரணசிங்கா யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில்வழக்குதொடர்ந்திருந்தார்.

இந்த வழக்குநேற்று மாஜிஸ்டிரேட் திரு அரசு வால்டன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக கொள்ளப் பட்டது

முடிக்குரிய தரப்பில் திரு. டி. கணேசலிங்கம் திரு. எஸ் கனகரத்தினத்தின் அனுசரணையுடன் சப இன்ஸ்பெக்டர் திரு. எஸ் ரணசிங்காவின் உதவியுடன் ஆஜரானர்.

எதிரிதரப்பில் திரு. சே. வி. எஸ். சண்முகநாதன் திரு ஆர். விசுவநாதனின் அனுசரணையுடன் ஆஜரானர்.

செல்லையா சின்னததுரை சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:-

சென்ற ஜூன் மாதம் 18-ம் திகதி நான் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியின் பிரதான வாசலில் காவல் செய்துகொண்டு நின்றேன். மாலை 6 மணியின் பின் வார்ட்டுகளில் நிற்கும் பார்வையாளர்களை வெளியேற்றி 'பேயிங்வார்ட்' வாசலைப் பூட்டுவதற்காக சுற்றிக்கொண்டு வந்தேன். அவ்வமயம் எதிரி என்னை அழைத்தார். எதிரி நான் அணிந்திருந்த கோட்டை கையால் பிடித்து செருப்பைக் கழற்றி என்னை அடிக்க வந்தார். அச்சமயம் அருமைநாயகம் என்பவர் வந்து எதிரியின் கையைப்பிடித்தார். ஆஸ்பத்திரிப பொலிசில் நான் சம்பவததை அறிவிததேன்.

திரு. கே.வி சண்முகநாதன் நீண்ட நேரம் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார். அப்பொழுது பொலிசில் அவர் கொடுத்த முதலாவது தகவலின் பிரதியையும் கோர்ட்டாரிடம் சமர்ப்பிததார்.

இதன் பின்னர் அருமைநாயகம் என்பவரும் சாட்சியமளித்தார்.

முடிக்குரிய தரப்பு சாட்சியங்கள் முடிவுற்றதும் மாஜிஸ்டிரேட் வழக்கைத் தள்ளுபடி செய்து எதிரியை விடுதலை செய்தார்.

# 'பெட்டிஷன்' எழுதிய மர்ம மனிதன் யார்?

— வழக்கறிஞர்

## ஊறெழு கொலை வழக்கில் தொகுப்புரை முடிந்தது

யாழ்ப்பாணம், செவ்வாய். ஊறெழு கொலை வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவாமின் முன்னிலையில் நேற்று மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்டபோது இரண்டாவது எதிரியின் சார்பில் ஆஜரான சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. டி. கணேசலிங்கம் தமது தொகுப்புரையை ஆரம்பித்தார்.

மாரிமுத்து மார்க்கண்டு என்பவரைக் கொலை செய்ததாகவும், கொலை செய்யச் சதி செய்ததாகவும், கொலைக்குரிய சாட்சியங்களை மறைத்து வைத்திருந்ததாகவும் குற்றஞ் சாட்டி ஊறெழுவைச் சேர்ந்த ஓய்வு பெற்ற பராமத்து ஓவர்சியர் கே. செல்லையாவின் பணியாள் சுப்பையா மாடசாமி, முத்துச்சாமி என்னும் கார் சாரதி திரு செல்லையாவின் மகள் செல்வி சரஸ்வதி ஆகியோர்மீது இவ்வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் முதலாம் எதிரியினதும் மூன்றும் எதிரியினதும் சார்பில் ஆஜரான சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கியு.ஸி. தமது தொகுப்புரையை ஏற்கெனவே முடித்து விட்டார்.

இரண்டாம் எதிரியின் சார்பில் ஆஜரான சிரேஷ்ட வழக்கறிஞர் திரு டி கணேசலிங்கம் தமது தொகுப்புரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:-

முதலாம் எதிரிக்கு எதிராக உள்ள சாட்சியங்கள்போலவே இரண்டாம் எதிரிக்கு எதிரான சாட்சியங்களும் உள்ளன. தில்லையன், கதிரேசு ஆகிய இரு சாட்சிகளும் மூன்று எதிரிகள் மீதும் பொலிசார் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வதற்கு முதல் நாள் தான் பொலிசாருக்கு வாக்கு மூலம் கொடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. சம்பவம் நடைபெற்ற தினத்திலிருந்து ஒரு மாத காலத்துக்குப்பின் அந்த இரு சாட்சிகளும் பொலிசாருக்கு வாக்கு மூலம் கொடுத்திருப்பது கவனிக்கத்தக்கது.

'பெட்டிஷன்' ஒன்று கிடைத்ததைத் தொடர்ந்தே இரண்டு சாட்சிகளிடமும் வாக்கு மூலம் பெறச் சென்றதாக குறுக்கு விசாரணையின் போது சார்ஜன்ட் முருகேசு தெரிவித்திருந்தார்.

### சாட்சிகள் ஒப்புக்கொண்டனர்

தங்களைப் பொலிசார் விசாரிக்கும்வரை சம்பவம் சம்பந்தமாக தாங்கள் கண்டதைப் பற்றி எவரிடமும் ஒரு வார்த்தை கூடப் பேசியதில்லை என்று தில்லையனும் கதிரேசுவும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

இந்த எதிரிகள்மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வதற்குக் காரணமாகவிருந்த, மிகப் பெறுமதிவாய்ந்த தகவல்களை இந்த இரு சாட்சிகளும் கொண்டு திரிகிறார்களென்பதை அறிந்துகொண்ட அந்த 'பெட்டிஷன்' எழுதிய மர்ம மனிதன் யார்? அவருக்கு இது எப்படித் தெரிந்தது?

மாஜிஸ்டிரேட்: மூன்றாவது எதிரியின் வளவு, கதவு ஆகியவற்றில் காணப்பட்ட இரத்தக் கறை, இரண்டாவது எதிரியின் காரில் சாமான் வைக்கும் பகுதியில் காணப்பட்ட கறை, சடலம் கிடந்த இடத்தில் கண்டெடுக்கப்பட்ட சாக்கில் காணப்பட்ட இரத்தக் கறை ஆகியவைபற்றி கோர்ட்டுக்கு உதவ்புரிவீர்களா?

வழக்கறிஞர்: இரத்தக்கறைகள் எப்பொழுது ஏற்பட்டதென்பதற்குச் சாட்சிய ஆதாரமில்லை. இறந்தவரின் இரத்தத்தை ஒரு தரத்தில் சேர்க்கமுடியாதிருப்பதாக அரசாங்க பரிசோதகர் தெரிவித்துள்ளார். எனவே பல்வேறிடங்களிலும் காணப்பட்ட இரத்தக் கறைகள் இறந்தவருடைய இரத்தம் என்று எவரும் சொல்லமுடியாதென்பதே எனது கருத்தாகும்.

### கார் சொந்தக்காரர் கூறிய விபரம்

திரு. கணேசலிங்கம் மேலும் கூறியதாவது:-

தனது அனுமதியின்றியோ தனக்குத் தெரியாமலோ தனது காரை இரண்டாவது எதிரி எடுத்துச்சென்றிருக்க முடியாதென்று கார் சொந்தக்காரர் தமது சாட்சியத்தில் கூறியிருக்கிறார்.

'கொலைக் குற்றச்சாட்டு நிரூபிக்கத் தவறினால் கொலைக்குரிய சாட்சியங்களை மறைத்தான குற்றச்சாட்டும் தோல்வியடைந்துவிடும்' என்று ஒரு கொலை வழக்கில் அப்பீல் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை திரு. கணேசலிங்கம் கடைசியில் சுட்டிக்காட்டித் தொகுப்புரையை முடித்துக்கொண்டார்.

தொகுப்புரைகள் யாவையும் பரிசீலனைசெய்து இம்மாதம் 29ந் திகதி தீர்ப்புக் கூறுவதாக மஜிஸ்டிரேட் தெரிவித்தார்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

புதன் 17-1-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரை இசை, 8-00 வீணை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஜலதரங்கம்.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 கே. பாக்கியராஜா - வயலின், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 ரேடியோ டாக்டர், 9-30 எஸ். பரம்தில்லைராஜா - பாட்டு

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15 பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 வீணை

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 கிளாரினட், 1-50 மெல்லிசை, 2-10 உயர்தரப் பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி(கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 சென்னை அஞ்சல், 7 45 'சத்யகாமன்' -நாடகம், 8-00 வீணை, 8-30 திரைப் படஇசை, 9-15 நல்லுரை, 9-30 டெல்லிஅஞ்சல், 9-45 இசைமாலை.

## "சமுதாயத்தை சீர்திருத்த நாடகங்கள் உதவவேண்டும்"

### நகரமேயர் வேண்டுகோள்

வேலணை, திங்கள்

"நாடகத்தை வெறும் பொழுதுபோக்குக்காக மட்டும் பார்க்காமல் அதில் உள்ள நல்ல கருத்துக்களைக் கிரகித்து அதன்வழி ஒழுக வேண்டும். நாடகம் ஒழுக்கத்தையும் நல்ல கருத்துக்களையும் எடுத்துக் கூறுவதாக அமைய வேண்டும். அப்படியான நாடகங்களால்தான் எமது சமுதாயத்தை திருத்த முடியும். எமது தமிழ் பேசும் இனம் சுபிட்சமாகவும் சுயமரியாதையாகவும் வாழ வேண்டுமானால் நம்மத்தியில் மலிந்துள்ள பல சீர்கேடுகள் களையப்பட வேண்டும். இப்பணியில் நாடகங்கள் பெரும் பங்கு கொள்ளலாம். சிறந்த சொற்பொழிவாளனாலும், எழுத்தாளனாலும் பெரிய ஸ்தாபனங்களாலும் முடியாததை நாடகத்தின் மூலம் எளிதாகச் சாதித்துவிடலாம். நாடகக் கலையில் வளர்ச்சிக்கு ஒவ்வொருவரும் இயன்றவரை உழைக்க வேண்டும்."

இவ்வாறு யாழ்ப்பாண நகர மேயர் திரு. டி. எஸ். துரைராசா வேலணை முத்தமிழ்க் கலையரங்கத்தினரின் "தமிழ் நாடகவிழா"வைத் தொடக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஆசிரியர் திரு. காங்கேயர் விழாவுக்குத் தலைமை தாங்கினார். கலை அரங்கச் செயலாளர் திரு. கே. பார்த்திபன் பேசும்போது "சந்தர்ப்பமும் வசதியும் கிடைக்காத காரணத்தால் எத்தனையோ இளம் கலைஞர்கள் முளையிலேயே கருகிவிடுகிறார்கள். இலைமறை காயாக இருக்கும் இவர்களை கைதூக்கிவிட நம் நாட்டு நாடகமன்றங்கள் உழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

விழாவில் கலையரங்கத்தாரால் தயாரிக்கப்பட்ட மூன்று நாடகங்கள் நடித்துக் காட்டப்பட்டன.

## ஆசிரியர்கள் இடமாற்றம்

முள்ளியவளை, திங்கள்

பெரியதம்பனை அரசினர் தமிழ்ப் பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. வி. எஸ். மரியாம்பிள்ளை, மாமடு-பழம்பாசி அரசினர் பாடசாலைக்கு மாற்றப் பட்டுள்ளார்.

சேமமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை உதவி ஆசிரியை திருமதி நகுலேஸ்வரி தம்பு முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரிக்கு மாற்றம் பெற்றுள்ளார்.

கேப்பாபுலவு அரசினர் பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. நடராசா, விசுவேறியாக் கல்லூரிக்கு மாற்றப்பட்டு, அவரது இடத்துக்கு இரத்தினபுரி-டாலை அரசினர் பாடசாலைத் தலைமையாசிரியர் திரு கே. கனகசபை நியமிக்கப்பட்டுள்ளார்.

தண்ணீரூற்றுச் சைவப்பாடசாலைத் தலைமையாசிரியர் திரு.ச. முத்தையா, முல்லைத்தீவு சைவப்பாடசாலைக்கு மாற்றப்பட்டு, அவரது இடத்துக்கு உதவியாசிரியர் க. சிவக்கொழுந்து பதவி உயர்வு பெற்றுள்ளார்.

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலிருந்து திருவாளர்கள் கே. முத்துலிங்கம், ஜே. ஏ. இராசேந்திரா, அச்சுவேலி அரசினர் பாடசாலை ஆசிரியர் திரு. பி. செல்லத்துரை ஆகியோர், கொல்லாந்தை மகா வித்தியாலயத்துக்கு மாற்றப் பட்டுள்ளனர்.

திருநெல்வேலி சைவாசிரியர் பயிற்சிக் கல்லூரியிலிருந்து திருமதி குமாரசிங்கம், தண்ணீரூற்று சீ. சீ. பாடசாலைக்கு நியமனம் பெற்றுள்ளார்.

## விதியைத் திருத்த கோரிக்கை

முள்ளியவளை, சனி.

"வட்டுவாகல் முகத்துவாரம் ரோட்டு, வெறும் மணலாக இருக்கிறது அப்பாதையை உபயோகிக்கும் மீன்பிடித் தொழிலாளரும் பிறரும் மிகுந்த கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அத்தெருவைச் செப்பனிடுவதற்கேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்." என்ற தீர்மானம், வட்டுவாகல் கிராம முன்னேற்றச் சங்கத்தில் நிறைவேற்றப்பட்டு, மீன்பிடி இலாகா அதிபருக்கும், அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டன.

## பட்டினசபை அங்கத்தவர் கடத்தப்பட்டாரா?

### காணவில்லையென பொலிசில் புகார்

முள்ளியவளை, சனி

முல்லைத்தீவுப் பட்டின சபையின் 3 ஆம் வட்டார அங்கத்தவரான திரு. வெற்றிவேலு ஜோசப் வியாழக்கிழமை இரவு திடீரெனக் காணமற் போய் விட்டதாக முல்லைத்தீவு பொலிஸில் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஒரு மோட்டார் காரையும் அதன் சாரதியையும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து காவலில் வைத்துள்ளதாகத் தெரிகிறது.

இம் மாதம் 24 ஆம் திகதி நடைபெறவிருக்கும், முல்லைத்தீவுப் பட்டினசபைத் தலைவர் தேர்தல் சம்பந்தமாக திரு ஜோசப் கடத்தப்பட்டதாகவும் சந்தேகிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

## பெற்றோர் ஒத்துழைப்பு

முள்ளியவளை, திங்கள்

"பிள்ளைகள், சமய ஒழுக்கமுடையவர்களாக வளர்வதற்கும் வாழ்வதற்கும், பெற்றோரின் ஒத்தாசை பெரிதும் தேவை. ஆசிரியரோடு பெற்றோரும் ஒத்துழைப்பார்களென நம்புகிறேன்".

கேப்பாபுலவு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசிய தலைமையாசிரியர் திரு. கே. கனகசபை மேற்கண்டவாறு கூறினார்.

உதவி ஆசிரியை ஒருவரை நியமிக்கும்படி கல்வியதிகாரிகளைக் கேட்டுக்கொண்டு, மாணவருக்கு பணிசும் பாலும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளும் தீர்மானங்களும் கூட்டத்தில் நிறைவேற்றின.

## தீயினால் வெந்த மாணவி

பையாகலை, செவ்வாய்.

கலட்புகமவைச் சேர்ந்த 19 வயது பாடசாலை மாணவி குமாரி நந்தாவதி எரிகாயங்களுடன் நாகொடை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்

பாடசாலைத் தோட்டத்தை பெருக்கிய பின்னர் குப்பைக்கு நந்தாவதி தீவைத்தார். இந்த தீயில் தவறுதலாக விழுந்த போது நந்தாவதிக்கு தீயினால் எரிகாயமேற்பட்டது.

## தலைமை ஆசிரியர் நியமனம்

முள்ளியவளை, செவ்வாய்

வவுனியாத் தொகுதியிலும் கிழக்கிலங்கையிலும், தலைமையாசிரியர் இல்லாதிருக்கும் பாடசாலைகளுக்குத் தங்கள் சங்க அங்கத்தவரான தகுதியான உதவியாசிரியர்களுக்குப் பதவியுயர்வளித்துத் தலைமையாசிரியர்களாக நியமிக்கும்படி, வவுனியாப் பகுதி நிரந்தரவாச அரசினர் ஆசிரியர் சங்கமும், கிழக்கிலங்கை அரசினர் ஆசிரியர் சங்கமும் வற்புறுத்தியுள்ளன.


# குனேகா செண்டுகள்

வாழ்க்கை மலர்ச்சியுற உலகப் புகழ்பெற்ற குனேகா மருக்கொழுந்து உபயோகித்து ஆனந்தமடையுங்கள்

தயாரிப்பவர்கள்:

**குனேகா** அடையார், மதராஸ் 20.

இலங்கை சோல் ஏஜண்டுகள்:

## ஜெகஜோதி அன் கோ,

குருநேனியா.

கொழும்பு ஸ்டாக்கிஸ்ட்:

## செல்வாஸ் (SELVAS)

(பிரபல ஜவுளித் தினிச விற்பனையாளர்கள்)

31, செட்டியார் தெரு, கொழும்பு.

யாழ்ப்பாண விற்பனையாளர்:

நமசிவ் பண்ணை, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

# இப்பொழுது...

## புத்தம் புதிய, மிகவும் சுவையான மோல்டட் பால்... வாங்கக் கூடியவற்றில் தலைசிறந்தது!*




ஸல் — குறைந்த விலையில் தினசரி உபயோகத்துக்கான புதிய மோல்டட் பால். பாலாடையின் இன்பகரமான நற்சுவையை ஸல் பெற்றிருக்கிறது. வேறெந்த விலை குறைவான மோல்டட் பாலுக்கும் இந்த இன்சுவை கிடையாது! ஸல் உடன் கரைந்து விடுகிறது. ஸலை வெறும் நீரோடு கலந்தால் கூட மிகவும் சுவையுள்ள பானமாகிறது. அதை டீ, கோப்பி, இவற்றுடன் கலந்து பருகினால் அவற்றின் சுவை பன் மடங்காகிறது.

இன்றே உங்கள் வீட்டுக்கு ஒரு டின் ஸல் எடுத்துச் செல்லுங்கள் !

(* ஆனாலும், இதன் விலை சாதாரண மோல்டட் பால்களை விட அதிகமில்லை)

## ஸல் உடன் கரையும் மோல்டட் பால்
## குடும்பத்தார் உடன் விரும்புவது

ஹார்லிக்ஸ் தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்பட்டது

# 'அநுராதபுரியில் சுதந்திர தினக் கொண்டாட்டம் வேண்டாம்'

## பிரதமருக்கு வரியிறுப்பாளர் கோரிக்கை

அநுராதபுரம், செவ்வாய்
காலஞ்சென்ற எம். பி. திரு. கொடகேயின் பிரிவு குறித்து அநுராதபுர நகரமக்கள் துக்கம் அனுஷ்டித்து வருவதால் இங்கு சுதந்திரதினக்கொண்டாட்டம் நடத்துவதை நிறுத்துமாறு அநுராதபுரி வரியிறுப்போர் சங்கம் பிரதமமந்திரியைக் கேட்டுள்ளது.

சுதந்திரதினக் கொண்டாட்டத்தை பெரிய அளவில்கொண்டாடுவது நல்லதாக இராது என்றும் சுதந்திரதினக்கொண்டாட்டத்துக்கான செலவைக் குறைத்துக்கொள்ளுமாறும் இச்சங்கம் சுருக்கித் தெரிவிக்கும்.

## தியேட்டர் செய்திகள்

யாழ்ப்பாணம் வெலிங்டன்: சிவாஜிகணேசன் - ஜெமினி கணேசன் நடித்த பாச மலர்

●

யாழ்ப்பாணம் மனோகரா சிவாஜி கணேசன் - ஜெமினி கணேசன் நடித்த பாச மலர்.

●

சாவகச்சேரி தேவேந்திரா: சிவாஜி கணேசன், பி. சரோஜா தேவி நடித்த விடிவெள்ளி.

## பொங்கல் விழா கூட்டம்

சாவகச்சேரி, செவ்வாய்
"ஆதிகால மனிதன் பயிர்செய்து வாழ்க்கையை நடாத்தத் தொடங்கிய அன்றே தைப்பொங்கலும் தொடங்கப்பட்டது. வாழையடி வாழையாக வாழ்ந்துவந்த தமிழினம் அன்றைய கொள்கையையே இன்றும் கடைப்பிடித்துவருகின்றது."

இவ்வாறு கலைமன்றத்தாரின் ஆதரவில் நடைபெற்ற பொங்கல் விழாவுக்குத் தலைமை வகித்து உரைநிகழ்த்துகையில் திரு. வி. என். நவரத்தினம் எம். பி. கூறினர். அவர் தொடர்ந்து பேசியதாவது:

"அந்நிய நாகரிகத்தில் மோகங்கொண்டு இடைக்காலத்தில் தமிழர் தம் நிலைமையை மறந்து பண்டைய பண்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும் கைவிட்டிருந்தனர். காலதேவதை மறுபடியும் தமிழரைக் கண்விழித்தெழுந்து பழைய கொள்கைகளையும், பழக்கவழக்கங்களையும், கொண்டாட்டங்களையும் கைக்கொள்ளச் செய்துகொண்டிருக்கிறது."

திரு. வி. என். நவரத்தினம் எம். பி. தலைமையில் எட்டு மைல்வரை ஊர்வலம் நடைபெற்றது.

### கலை அரங்கம்

"ஈழநாடு" 'கலை அரங்கம்' வியாழக் கிழமைகளிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் வெளிவரும். கலையுலகச் செய்திகளை இலங்கையில் உடனுக்குடன் தருவது 'ஈழநாடு' 'கலைஅரங்கம்'

## பெண்கடத்த முயன்ற வழக்கு

### மற்றும் இருவர் சரண்

மாவிட்டபுரம், செவ்வாய்
சங்கானைப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த பிராம்பத்தையிலுள்ள அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் ஆசிரியையாகக் கடமையாற்றும் புண்ணியமூர்த்தி அருந்தவம் என்பவரை அவரது சொந்த மைத்துனரான பி. தங்கராசா என்பவர் இம்மாதம் 10ம் திகதி காலை 8-30 மணியளவில் பாடசாலைக்குச் செல்லும் சமயம் கடத்திச் சென்றுர். ஆனல் ஆசிரியையின் சாதுரியத்தால் அவர் இம்மாதம் 15ம் திகதிவரை ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்தார். இவ்வழக்குச்சம்பந்தமாகப் பொலிஸாரால் தேடப்பட்ட மற்றும் இருவரும் நேற்று மல்லாகம் நீதிபதி முன்னிலையில் சரணடைந்தார்கள்.

நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம், முன்னர் ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்த பி. தங்கராசாவையும் நேற்று சரணடைந்தவர்களான "லண்டன் கந்தையா" என அழைக்கப்படும் வல்லிபுரம் கந்தையாவையும், பொன்னையா குமாரவேலு (சம்பவதினம் கடத்திச் செல்வதற்கு கார் ஓட்டியவர்) வையும் மேலும் இம்மாதம் 22-ம் திகதிவரை ரிமாண்டில் வைக்கும்படியும் இக்கடத்தலுக்கு உபயோகிக்கப்பட்ட காரை ரூபா 2000 பிணையில் கொண்டுசெல்லும்படியும் உத்தரவிட்டார்.

## இளைஞர் சங்கத்தின் பொங்கல் விழா

யாழ்ப்பாணம், புதன்
கொட்டடி இளைஞர் சங்கத்தினர் சென்ற ஞாயிற்றுக்கிழமை காலை முற்றவெளி மைதானத்தில் பொங்கல் விழாவை நடாத்தினர். அன்றுகாலை இளைஞர்கள் எல்லோரும்சேர்ந்து பொங்கல் வைத்தபின்னர் அங்கு வந்திருந்த அனைவருக்கும் பொங்கல் அமுது வழங்கப்பட்டது.

## இந்திய கோஷ்டிக்கு ராஷ்டிரபதி பாராட்டு

புதுடில்லி, ஜுன் 16
இங்கிலாந்து எம். ஸி. ஸி. கோஷ்டியைத் தோற்கடித்த இந்திய கிரிக்கெட் கோஷ்டிக்கு ராஷ்டிரபதி டாக்டர் ராஜேந்திர பிரஸாத், உப-ராஷ்டிரபதி டாக்டர் ராதா கிருஷ்ணன், மந்திரி டாக்டர் சுபபராயன், மந்திரி ஸ்ரீமாலி ஆகியோர் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

இம்மாதம் 31ம்தேதி கண்ட்ராகடர் தலைமையிலான இந்திய டெஸ்ட் கோஷ்டி பம்பாயிலிருந்து விமானமூலம் மேற்கிந்தியத் தீவுகளுககுப் புறப்படும்.

## தேரில் பிடித்த தீயை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆறுமணியளவில் நான் நித்திரைவிட்டெழுந்து பார்த்தபோது கோவில் தேரில் தீப்பிடித்திருந்ததைக் கண்டேன். குருக்களைக் கூபபிட்டேன்; காணவில்லை. குடமொன்று கிணற்றடியிலிருந்தது. கிணற்றைப் பார்த்தபோது குருக்களைக் கண்டேன்."

கிணற்றில் விழ்ந்து மூச்சுத்திணறி மரணமானர் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

# சட்டவிரோதமாக வெங்காயம் கடத்தினராம்

## பொருட்கள் கைப்பற்றப்பட்டன

சாவகச்சேரி, செவ்வாய்
யாழ்ப்பாணத்திலிருந்து கள்ளத்தனமாக வெங்காயம் கடத்த முயற்சித்ததாக இருவர் கண்டுபிடிக்கப் பட்டனர். யாழ்ப்பாண வாசிகளான தம்பையா நடேசு, சாகுல்ஹமீது மஸ்தான் ஆகிய இருவரும் உணவுக் கட்டுப்பாட்டதிகாரியின் உத்தரவில்லாமல் 155 மூடை வெங்காயத்தைக் கடத்திக்கொண்டு சென்றதாகவும் ஆனையிறவு தடைதாண்டியில், உணவு, விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகரினல் இச்செயல் கண்டுபிடிக்கப்பட்டதாயும் கூறப்பட்டது. சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் திரு. ஏ. வைத்திலிங்கம் முதலாம் எதிரியைக் குற்றவாளியாகக்கண்டு ரூபா 250 அபராதம் வதித்து இரண்டாம் எதிரியை எச்சரிக்கை செய்து விடுதலை செய்தார்.

165 மூடை வெங்காயமும் பறிமுதல் செய்யப்பெற்று ஏலத்தில் விற்பனையாகிப் பணம் கோர்ட்டில் கட்டப்பட்டது.

## தமிழ் 'ஸ்ரீ' வழக்கில் எதிரி விடுதலை

பருத்தித்துறை, செவ்வாய்
வல்வெட்டித்துறையைச்சேர்ந்த கந்தசாமி வேலும்மயிலும் என்னும் கார்ச்சாரதி தாம் ஓட்டிச்சென்ற காரில் 11-10-61 திகதி அன்று சிங்கள ஸ்ரீக்குப்பதில் தமிழ் ஸ்ரீ போட்ட தகட்டை மாட்டியிருந்தார் என வல்வெட்டித்துறைப்பொலிஸாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதிபதி திரு. ஏ. வைத்திலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டபோது நீதிபதி எதிரியைச் சுற்றவாளியாகக்கண்டு விடுதலை செய்தார்.

# 'குடிசைத் தொழிலில் ஈடுபடுவதே சிறந்தது'

## பிரிவுபசாரக் கூட்டத்தில் எம். பி. அறிவுறுத்து

சாவகச்சேரி, செவ்வாய்
"அரசாங்க உத்தியோகங்களைஎதிர்பார்ப்பதிலும்பார்க்க குடிசைக் கைத்தொழில்களில் இளம் வாலிபர்களும் பெண்களும் ஈடுபடுவது சாலச்சிறந்ததாகும். உயர்தர படிப்புக்குத் தகுதியுள்ளவர்கள் நீங்கலாக மற்றவர்கள் குடிசைக் கைத்தொழில்களில் பயிற்சி பெறுதல் புத்திசாலித்தனமாகும். அப்போதுதான் நம் தேவைகளில் ஒருபகுதி நிறைவேறும்."

இவ்வாறு சாவகச்சேரி நெசவு நிலையத்தில் ஆசிரியையாகக் கடமையாற்றி இடம் மாறிச்செல்லும் திருமதி தையல்நாயகி கணபதிப்பிள்ளைக்கு நடைபெற்ற பிரிவுபசாரக் கூட்டத்தில் சாவகச்சேரிப் பாராளுமன்றப் பிரதிநிதி திரு. வி. என். நவரத்தினம் கூறினர். மேலும் அவர் தொடர்ந்து பேசியதாவது -

பெண்கள் சகிப்புத்தன்மையும் பொறுமையும் படைத்தவர்கள். அவர்களுக்கு நெசவுப் பயிற்சி பொருத்தமுடையதாகும். ஆண்களிலும் பார்க்கக் கவர்ச்சிகரமான டிஸைன்களைச் சித்தரிப்பவர்கள் பெண்களே."

கூட்டம் தென்மராட்சிப் பகுதிக் காரியாதிகாரி கந்தோரில் திரு. ஆர். ஆசீர்வாதம் தலைமையில் நடைபெற்றது. திரு. கே. குணரத்தினம், ஸ்ரீமதி சரவணமுத்து கிருபைரத்தினம் முதலானவர்கள் ஸ்ரீமதி தையல்நாயகியின் அரும் பணிகளைப்பற்றிப் பாராட்டிப்பேசினர். மாணவர்களின் இன்னிசைக்கச்சேரிகளும் விருந்துகளும் நடைபெற்றன. தமக்களித்த உபசரணைக்கும் உபகாரங்களுக்கும் ஸ்ரீமதி தையல்நாயகி நன்றி பாராட்டினர்.

# டச்சு போர்க் கப்பல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராய் இருப்பதாக டச்சுப்பிரதமர் ஐ. நா. வுக்குத் தெரிவித்திருக்கிறுர்.

ஆனல் டச்சு நடவடிக்கை பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அவசியமில்லாமல் செய்துவிட்டதென இந்தோனேஷியா தெரிவித்திருக்கிறது.

## காங்கோ பிரதமர் அமெரிக்கா செல்வார்

லியப்போல்ட்வில்லி, ஜன. 16
காங்கோ பிரதமர் திரு. அடூலா இம்மாதக் கடைசியில் அமெரிக்கா செல்வார். அமெரிக்க அதிகாரிகளுடனும், ஐ. நா. அதிகாரிகளுடனும் அவர் பேச்சுவார்த்தைகள் நடத்துவார். ஐ. நா. சபையிலும் அவர் உரைநிகழ்த்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

காங்கோவில் ஐ. நா.வுக்குப் படைகளை அனுப்பிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளையும் நியூயோர்க்கில் சந்தித்து அவர் பேச்சுவார்த்தை நடத்துவார்.

## பாகிஸ்தானில் இலங்கை வர்த்தக தூதுகோஷ்டி

கொழும்பு, செவ்வாய்
வர்த்தகமந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன தலைமையில் இலங்கை வர்த்தகத் தூதுகோஷ்டி ஒன்று கராச்சிக்குப் போய்ச் சேர்ந்தது.

## அடுத்த மாதம் பர்மாவுக்கு புதிய ஜனதிபதி

ரங்கூன், ஜன. 16
பர்மிய பார்லிமெண்ட் அடுத்தமாதம் 15ம் திகதி கூடி பர்மாவின் புதிய ஜனதிபதியைத் தெரிவுசெய்யும்.

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு)

வெலிங்டன் - மனோகரா (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி)

ஸ்ரீகிருஷ்ணா (திருக்கோணமலை) லக்ஷ்மி (இரத்தினபுரி) மொடர்ன் (பதுளை)

விஜிதா (மஸ்கெலியா) தீபொளி (நுவரெலியா) ஜெமினி (ராகலை)

★ உண்மை இலட்சியம்!
★ அன்புத் தியாகம்!!
★ உணர்ச்சி ஏக்கம்!!!

மூன்று உணர்ச்சிப் பின்னல்களில் உருவான இலக்கியப் படைப்பு!
இன்றே பாருங்கள்!



சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, எம். என். ராஜம், தங்கவேலு, எம். சரோஜா, எம். என். நம்பியார்

நடித்த

பாச மலர்

திரைக் கதை - டைரக்ஷன்: ஏ. பீம்சிங்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு ஜனவரிமாதம் 17-ந் திகதி அச்சிட்டு வெளியிடப் பெற்றது.